கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

Valampuri

து 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | கார்த்திகை 15 | திங்கட்கிழமை | (01.12.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 347

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## சங்கரி மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

# கூட்டணி மத்திய குழுக் கூட்டத்தில்

# பெரும் அமளிதுமளி-கைகலப்பு

## கட்சி பிளவுறும் அபாயம்

(நமது நிருபர்)

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் நேற்றுக் காலை கொழும்பில் நடைபெற்ற போது கட்சியின் இரு பிரிவினருக் கிடையே ஏற்பட்ட கடுமையான வாக்குவாதத்தின் மத்தியில் ஏற்பட்ட அமளிதுமளியை அடுத்து கூட்டம் குழம்பியது.**

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் விவகாரம் தொடர்பாகவும், ...தைய அரசியல் குழப்பநிலை ...ர்பாகவும் ஆராய்வதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியின் தலைமையில் பரபரப்பான சூழ்நிலையில் ஆரம்பமாகி சுமார் ஏழரை மணித்தியாலங்கள் வரை நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பமான அரை மணி நேரம் கழித்து கூட்டணியின் தலைவர்

(10ம் பக்கம் பார்க்க)



## ...ங்கரி மீதான நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேறியுள்ளது!

### கூட்டணியின் செயலாளர் சம்பந்தன் தெரிவிப்பு.

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் மீது நம்பிக்கையில்லையென கூட்டணி ...ன் மத்திய குழு தீர்மானித்துள்ள ...க கூட்டணியின் செயலாளர் ...பகம் இரா.சம்பந்தன் நேற்றிரவு வலம்புரிக்குத் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை யகதத்தில் நேற்று நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்திலே மேற்படி தீர் மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சம் பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற தமிழர் விடு தலைக் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமான

(10ம் பக்கம் பார்க்க)

## 40 இந்திய மீனவர்கள் கடற்படையால் கைது

(சென்னை)

இராமேஸ்வரம் மீனவர்கள் 40 பேரை இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கைது செய்ததாக தமிழக மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் கச்ச தீவை அண்டிய பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த வேளை அப் பகுதிக்கு வந்த இலங்கை கடற் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டு மீனவர்களைக் கைது செய்ததாக இராமேஸ்வரம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்

இதனையடுத்து இராமேஸ்வரம் பகுதியில் மீனவர்கள் மத்தியில் பதற்றமான நிலை தோன்றியுள்

(10ம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லாப் பிரேரணையில்

# மத்திய குழு உறுப்பினர்களை மிரட்டி

# ஜோசப் எம்.பி. கையெழுத்து வாங்கினார்

### ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுவை கட்சியின் பொதுச் சபையே தீர்மானித்தது. ... பொதுச் சபைதான் தலை ...யா அன்றி செயலாளரையோ ...வில் இருந்து விலக்கும் அதி ...தைக் கொண்டது. ... நிலையில் அப்பொதுச் ...கூடித்தான் என்மீது நடவடிக் கையெடுக்க வேண்டும் இவ்வாறு கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி நேற்று இரவு வலம்புரிக்குத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுக் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுவின் நடவடிக்கைகள் குறித்து ஆனந்தசங்கரியுடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றைய மத்திய குழுவின் தீர் மானம் தொடர்பாக சங்கரி மேலும் தெரிவிக்கையில்,

கூட்டணியின் தலைவர் என்ற வகையில் நேற்றைய மத்திய குழுக் கூட்டம் எனது தலைமையில்நடை பெற்றது. இதன் போது கூட்டத்தில் எழுகின்ற ஒழுங்கு பிரச்சினைக ளுக்கான விளக்கங்களை தலை வர் என்ற முறையில் நானே அறி விக்க வேண்டும். இதற்கு மாறாக கூட்டத்தில் எழுந்த ஒழுங்குப் பிரச் சினைகளின் போதெல்லாம் இரா. சம்பந்தன் எழுந்து நின்று விளக்க

(10ம் பக்கம் பார்க்க)

## வடக்குக் கிழக்கில் பலத்த காற்றுடன் மழை பெய்யலாம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங் களில் இன்று பலத்த காற்றுடன் மழை பெய்யுமென வளிமண்டல வியல் திணைக்களம் தெரிவித்துள் ளது.

ஊவா, வட மத்திய மாகாணங் களிலும், அம்பாந்தோட்டையிலும் இதே போன்ற வானிலை காணப் படுமென்றும் ஏனைய பிரதேசங்க ளில் மாலைவேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யுமெனவும் வளி மண்டலவியல் திணைக்களம் தெரி வித்துள்ளது.

இதேவேளை வடக்குக் கிழக்கு, தென் கிழக்கு கடற்பிரதேசங்கள் ஓரளவு கொந்தளிப்பாக இருக்கு மெனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ந-5)

## தமிழ்மொழி மூல ஆசிரியர் ...தவிக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் ...ள தமிழ் மொழி மூலப் பாட ...லைகளுக்கு ஆயிரம் ஆசிரியர் ...ள நியமனம் செய்வதற்கான ...விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ...பல்கலைக் கழக மானிய ...ணைக்குழுவின் கீழ் நிர்வகிக்க ...ம் இலங்கையின் அங்கீகரிக்கப் ... பல்கலைக் கழகம் ஒன்றிற்கு ...மதி பெறுவதற்கு தகைமை ...பற்றுள்ள கல்விப் பொதுத் தரா தர உயர்தரப் பரீட்சையில் தேர்ச் சியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலம்இவர்கள் தெரிவு செய்யப்பட்டு இலங்கை ஆசிரியர் சேவையில் தரம் 3ல் இணைத்துக் கொள்ளப் படவுள்ளனர்.

2003ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்பு (இன்று) தமிழ் மொழி மூல கல்விப் பொதுத்

(10ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் நடவடிக்கையில் பிரதமர் அதிருப்தி

# 4 பேர் அடங்கிய நல்லிணக்க குழு

# இறுதித் தடவையாக திங்கள் கூடும்

(கொழும்பு)

ஜனாதிபதி மூன்று அமைச் சுக்களைப் பொறுப்பேற்றதால் எழுந்த அரசியல் இழுபறி நிலையை போக்குவதற்கு ஜனாதிபதியும் பிர தமரும் நியமித்த 4 பேர் கொண்ட குழுவினரின் பேச்சுக்கள் தற்போது முறிவடைந்துள்ள நிலையில் ஜனாதிபதியின் யோசனைகளை அரசாங்கம் நிராகரித்துள்ளது. மேற்படி குழுவினர் தமது முடிவு களை கடந்த வெள்ளியன்று வெளியிடவிருந்தனர். ஆனால் ஜனாதிபதி இதற்கு முன்னர் எடுத் முடிவுகளிலிருந்து பின்வாங்கிய தோடு புதிதாக பிரேரணைகளை முன்வைத்திருக்கிறார் என குற்றம் சாட்டியே அரசாங்கம் அதனை நிராகரித்திருக்கிறது.

கடந்த திங்கள் அன்று நடைபெற்ற இக்குழுவினிடையேயான மூன்றாம் கட்ட பேச்சுக்களின் போது எடுக்கப் பட்ட முக்கிய விடயங்களின் விபரங் களை வெளியிட விருந்த நேரத்தில் வெள்ளியன்று புதிய யோசனைகள் ஜனாதிபதி தரப்பால் முன்வைக்கப்

(10ம் பக்கம் பார்க்க)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முன்னால் போராட்டம் நடத்தத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

கிழக்கு இலங்கையில் 7 முஸ்லிம் இளைஞர்கள் காணாமல் போனமை தொடர்பாக நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதெனக் காரணம்காட்டி நாட்டின் முக்கிய மூன்று அமைச்சுக்களை பொறுப் பேற்ற ஜனாதிபதி, வடபகுதியில் கடந்த காலங்களில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன 600 தமிழர்களின் நிலை குறித்து இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காதது ஏன் என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கமும் அன்னையர் முன்னணியும் இணைந்து யாழ். பருத்தித்துறை வீதியிலுள்ள அன்னையர் முன்னணி இல்லத்தில் நேற்றைய தினம் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டின்போதே இவ்வாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் சங்கத்தலைவர் பொ.செல்வராஜா தலைமையில் இடம்பெற்ற இப் பத்திரிகையாளர் மாநாட்டில் இரு சங்கங்களையும் சேர்ந்த உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இம் மாநாட்டில் சங்கச் செயலாளர் எஸ்.சற்குணம் கருத்து வெளியிடுகையில்;

வடபகுதியில் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் தொடர்பாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டுவந்த போதிலும் அவ் விசாரணைகளின் இறுதி அறிக்கை ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளது. இதற்கு இவ் இரு சங்கங்களும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகியோர் இப்பிரச்சினைகள் குறித்து இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்காததையிட்டு நாம் பெரும் கவலையடைகின்றோம்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் இச்செயற்பாடுகள் தேசிய மட்டத்திலும் மக்களை ஏமாற்றும் முயற்சிகளாகவே அமைந்துள்ளன.

கடந்த 1996ஆம் ஆண்டு காலப் பகுயிலிருந்து இதுவரை எமது பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் இத்தரப்பினர் தீர்த்து வைக்கவில்லை. இதையடுத்து படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கமும் அன்னையர் முன்னணியும் ஒன்றிணைந்து வரவுள்ள அடுத்த தேர்தலில் போட்டியிடவுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமல் போனோர் தொடர்பாகவும் கிழக்கிலங்கையில் காணாமல் போன முஸ்லிம் இளைஞர்கள் தொடர்பாகவும் இதுவரை எதுவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் இலங்கை மனித உரிமைகள் குழு எடுக்காததைக் கண்டித்து சர்வதேச மனித உரிமைகள் தினமான எதிர்வரும் 10ம் திகதி யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தின் முன்னால் மறியல் போராட்டம் ஒன்றை நடாத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தின் முன்னால் அன்றையதினம் நடாத்தப்படவுள்ள இம்மறியல் போராட்டத்தின் போது யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் ஊடாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(தி-43.16)

## மன்னாரில் 500 வீடுகள் வெள்ளத்தில்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக சுமார் 500 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக மன்னார் மாவட்ட அரசியல் அதிபர் வே.விஸ்வலிங்கம் தெரிவித்துள்ளார்.

சமூகசேவை திணைக்களப பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி-61.10)

# இத்தாலிக்கு செல்ல முயன்ற 60 பேர் நீர்கொழும்பில் கைது

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பிலிருந்து சட்ட விரோதமான முறையில் இத்தாலிக்கு செல்ல முயன்ற 60 இலங்கையர்கள் நீர்கொழும்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 60 இலங்கையரில் 43 தமிழர்களும், 13 சிங்களவர்களும் அடங்குவர் என கடற்படையின் பேச்சாளர் ஜெயந்த பெரேரா தெரிவித்துள்ளார்

கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் நீர்கொழும்பு, கொச்சிக்கடை, தங்கல கடற்படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ம)

## 2 ஆயிரம் சவுக்கு மரக்கன்றுகள் நடுகை

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கத்தினால் மரநடுகைத் திட்டத்தின் கீழ் 2 ஆயிரம் சவுக்கு மரக்கன்றுகள் நடுகைக்காக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

(த-52)

# மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொறுப்பு கிராம அலுவலர்களுக்குண்டு

### கிராம அலுவலர் பயிற்சிப் பட்டறையில் அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்களின் தேவைகளை நேரடியாக நிறைவு செய்யும் பொறுப்புக்களைக் கொண்ட கிராம அலுவலர்கள் அனைவரும் அரசின் கொள்கைகளுக்குட்பட்டு செயற்பட வேண்டுமென யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கிராம அலுவலர்களுக்கான பயிற்சிப் பட்டறையை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே மேற்படி விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள கிராம அலுவலர்களின் ஆற்றலை மேம்பாடடையச் செய்யும் வகையில், யு.என்.எச.சி.ஆரின் நுண்கருத்திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்டுவரும் இப் பயிற்சிப்பட்டறையில், 60கிராம அலுவலர்களும், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் வே.வீரகத்திப்பிள்ளை உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இப் பயிற்சிப் பட்டறையில் அரச அதிபர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

காலத்துக்குக் காலம் அரசாங்கம் தனது கொள்கைகளில் மாற்றம் செய்து வருகிறது. அதனடிப்படையில் மாற்றியமைக்கப்படும் அரசின் கொள்கைகளுக்கு உட்பட்டு கிராம அலுவலர்கள் செயற்பட வேண்டும்.

அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் நாட்டின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகின்றன. அவை உரியவாறு மக்களைச் சென்றடைகிறதா? என்பதை உறுதி செய்ய வேண்டிய கடமை ஒவ்வொரு கிராம அலுவலர்களுக்கும் உண்டு.

மற்றும் மக்களின் தேவைகளை உணர்ந்து உரிய முறையில் அதற்கேறறவாறு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் கிராம அலுவலர்கள் ஒவ்வொருவரினதும் முக்கிய பணியாகும்.

நாட்டில் கடந்த கால. யுத்தங்களால் அழிவடைந்தும் சேதத்திற்கு உள்ளாகியும் உள்ளவற்றை தற்போதைய சமாதான சூழ்நிலையில் புனரமைப்புச் செய்வதும், பாதிக்கப்பட்டவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பது உட்பட மீள்குடியேற்றம் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு கிராம அலுவலர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்பதை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

ஏனைய மாவட்டங்களிலுள்ள கிராம அலுவலர்களைவிட, வட-கிழக்கிலுள்ள கிராம அலுவலர்கள் வித்தியாசமானவர்கள்.

வட-கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டிய தேவையை உணர்ந்து செயற்பட வேண்டிய முக்கிய பணி இங்குள்ள கிராம அலுவலர்க்ளுக்குண்டு.

எனவே, அரசின் கொள்கைகளுக்கு உட்பட்டு அனைத்து கிராம அலுவலர்களும் தமது கடமைகளை உணர்ந்து பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட கிராம அலுவலர்களுக்கான இவ்இரு நாள் ஆற்றல் அபிவிருத்திப் பயிற்சிப் பட்டறை இன்றும் யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது. (தி-16).




## இன்னு ஒரு தகவல்

### வாடிக்கையாளர்களைக் கவர்வது எப்படி?

''எனக்கு அதிர்ஷ்டமே இல்லை சார்!'' என்றார் ஒருவர். ''ஏன் அப்படிக் கூறுகின்றீர்கள்?'' என்று கேட்டேன். ''வியாபாரம் செய்யலாம் என்று ஒருகடை வைத்தேன். வேண்டியவர்கள் கூட என் கடையில் வந்து எதுவும் வாங்கமறுக்கின்றனர். எல்லோரும் அடுத்த கடைக்குதான் போகின்றனர்'' என்று கூறி அலுத்துக் கொண்டார்.

''இதற்குப் போய் அதிர்ஷ்டம் இல்லை என்று கூறாதீர்கள் சார். வாடிக்கையாளர்களைக் கவர்வது எப்படி என்று உங்களுக்குத் தெரியவில்லை அதுதான் குறை'' என்றேன். ''சார் உங்களுக்குத் தெரிந்தால் அந்த இரகசியத்தைக் கொஞ்சம் சொல்லிக் கொடுங்களென்'' என்றார்.

''சரி! உங்கள் காதை இப்படிக் கொடுங்கள்'' என்று சொல்லி ஆரம்பித்தேன். கடை வைத்திருப்பவர்கள் எல்லோரும் இதனைக் கேளுங்கள். எப்போதும் பணத்தைச் சம்பாதிப்பதிலேயே குறியாக இருக்காதீர்கள். அதைவிட முக்கியமாக நீங்கள் சம்பாதிக்க வேண்டியது வாடிக்கையாளரின் மனநிறைவு! கடைக்கு வருபவர்கள் திருப்தியுடன் போக வேண்டும் அது முக்கியம். அதில் கவனமாக இருக்க வேண்டும்.

கடைக்கு வரும் ஒருவர் ஏதாவது ஒரு குறை கூறுவதாக வைத்துக் கொள்ளுங்கள். அதை அலட்சியப்படுத்தக் கூடாது. மிகுந்த அக்கறையுடன் அதைக்காது கொடுத்து கேட்க வேண்டும். ''அப்படியா சார் அதை நான் அவசியம் கவனிக்கின்றேன்'' என்று கூற வேண்டும். ஒருத்தர் வந்து ''சார் நேற்று உங்கள் கடையில் இதை வாங்கிக் கொண்டு சென்றேன். வீட்டில் இது வேண்டாம் என்றுகூறுகின்றனர். அதைத் திருப்பிக் கொடுப்பதற்காக வந்தேன்'' என்று கூறித் திருப்பித் தருகின்றார். உடனே நீங்கள் முகம் சுளிக்காமல் எரிச்சல்படாமல் வழக்கம் போல் நிதானமாக முகமலர்வுடன் அதைத் திருப்பி வாங்கிக் கொள்ளுங்கள்.

இவ்வளவு ரூபாய்க்குப் பொருட்கள் வாங்கினால் இந்த ஸ்பூன் அன்பளிப்பு... இப்படி ஏதாவது கொடுக்கலாம். பண்டிகைக் காலங்களிலும் பொருள்கள் வாங்குப்பவர்களுக்கு இப்படி ஏதாவது பொருத்தமான அன்பளிப்புக் கொடுக்கலாம். நீங்கள் கொடுப்பது ஒரு சர்வ சாதாரணப் பொருளாக இருந்தாலும் அதை வாங்குபவர்களின் மனதில் ஒரு மகிழ்வை அது ஏற்படுத்தும். எதுவும் உங்களால் கொடுக்க முடியாவிட்டாலும் கூட உங்கள் முகம் நிறைந்த சிரிப்பையாவது கொடுங்கள் அது போதும்.

உங்கள் கடையில் இல்லாத ஒரு பொருளை வாடிக்கையாளர் வந்து கேட்டால் உடனே இல்லை என்று முகத்தில் அடித்தது போல் கூறி விடாதீர்கள். சிறிது அமரச் சொல்லி யாராவது ஒரு பணியாளரை அனுப்பி வெளியிலிருந்து வாங்கிக் கொடுங்கள்.

சிலர் உங்கள் கடைக்கு வரும்போது குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வருவார்கள். அப்போது நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால் அந்தக் குழந்தைகளை முதலில் கவனிக்க வேண்டும். அதன் கன்னத்தை கிள்ள வேண்டும். அதனுடன் விளையாட வேண்டும். அதற்கு இனிப்பு, பிஸ்கட் கொடுத்து அதன் கவனத்தைக் கவரவேண்டும்.

உங்கள்கடையில் பணி புரிபவர்கள் சுத்தமாக இருகக வேண்டும் சிரித்தமுகம், சுறுசுறுப்பு இவையிரண்டும் அவர்களுக்குத் தேவை. அழுது வடிந்து கொண்டிருக்கக்கூடாது. அடுத்து இன்னாரு விஷயம். அதிகமாகப் பொருள்கள் வாங்கும் ஒருவரிடம் மரியாதைக் குறைவாகவும், வேறுவிதமாகவும் நடந்து கொள்ளக் கூடாது. 5 ரூபாய்க்கு வாங்கினாலும் சரி, 500 ரூபாய்க்கு வாங்கினாலும் சரி அவர்களிடம் நீங்கள் காட்டும் மரியாதையில் வித்தியாசம் இருக்கக்கூடாது.

எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் கடையில் ஒரு பொருள் வாங்கினால் அது உண்மையானதாக இருக்கும், தரமுள்ளதாக இருக்கும் என்கின்ற நினைப்பு மக்களுக்கு வர வேண்டும். அதனால் தரமான பொருட்களையே உங்கள் கடையில் வைத்திருக்க வேண்டும்.

இதுவரை நான் கூறியவற்றைக் கவனத்தில் வைத்து கொண்டு நீங்கள் கடையை ஆரம்பியுங்கள். வியாபாரம் நன்றாக அமையும். இந்த யோசனைகளில் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய ஒரு விஷயம் உள்ளது. அது என்னவென்று தெரிந்து கொள்ள இதைக் கேளுங்கள்.

எனது நண்பர் ஒருவர் வந்தார். ''சார் உங்களது யோசனைகளைக் கேட்டதனால் நான் ஒரு அறை வாங்கியது தான மிச்சம்'' என்றார். என்னவென்று கேட்டேன்.

''எனது கடைக்கு ஒருவர் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தார். உங்கள் யோசனைபபடி அந்தக் குழந்தையின் கன்னத்தைக் கிள்ள முயற்சித்தேன். திடீரென்று அந்தக் குழந்தை குனிந்து கொண்டது. என் கை குழந்தையின் கன்னத்திற்கு பதிலாக அதைத் தூக்கிக் கொண்டு வந்தவரின் கன்னத்தைக் கிள்ளி விட்டது. அதுதான் இப்படி ஆகி விட்டது'' என்றார் கன்னத்தைத் தடவியபடி.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

### இரு பிரதான அரசியல் கட்சிகளும்

# நிரந்தர சமாதானத்தை உருவாக்க ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்

## பிரபா உரையில் உள்ளார்த்தம் இது - பௌசி

(லண்டன்)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும் எதிர்க்கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணியும் இணைந்து செயற்படாது விட்டால் மீண்டும் நாட்டில் போர் உருவாகும் அபாயம் ஏற்படும் என பொது ஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

மாவீரர் தின இறுதி நாளான கடந்த 27ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஆற்றிய விசேட உரைபற்றி பி.பி.சிக்குவழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் கூறியதுபோல நாட்டின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் தமக்குள்ளே அரசியல் முரணபாடுகளை வளர்த்துக் கொண்டால் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது.

குறிப்பாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அரசியல் முரண்பாடுகளைக் களைந்து நாட்டின் நலன் கருதி ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

மேற்படி இரு பிரதான கட்சிகளும் ஒரு கொள்கையையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. அதாவது, நாட்டில் மீண்டும்போரை ஆரம்பிக்காது சமாதானத்தை ஏற்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. ஆனால், அந்தக் கொள்கையை பின்பற்றும் வழிகள்தான் வேறாக உள்ளன.

இவைதவிர, தமிழீழ விடுதலைப் புலிகள் கோரும் இடைக்கால நிர்வாக சபையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொது ஜன ஐக்கிய முனனணி ஆகியன எதிர்த்து வருவதாக சிலர் விமர்சித்து வருகின்றார்கள்.

ஒரு நாட்டில் இரு நிர்வாகங்கள் இருப்பது நாடு இரண்டாகப் பிளவுபடுவதற்கு வழிவகுக்கும் என்று அவர்கள் கருதுகின்றார்கள். எனவே இது பற்றி நாம் அவர்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம்.

எனவே, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளைக் காப்பாற்றி அவர்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமாயின், இரு பிரதான கட்சிகளும் ஒற்றுமையுடன் செயற்பட்டு மீண்டும் விடுதலைப்புலிகளுடன் சமாதானப பேச்சுவார்த்தையினை ஆரமபித்து நிரந்தர சமாதானத்தை உருவாக்க வேண்டும் என்றார். (உ-62, 10)

# முஸ்லிம்கள் மீள்குடியமர்வு விடயத்தில் இந்திய அரசின் அழுத்தம் அவசியம்

## ரிசாத் பதியுதீன் எம்.பி. கருத்து

(புத்தளம்)

வடக்கில் இருந்து வெளியேற்றப் பட்ட முஸ்லிம்களை மீளக்குடியமர்த்தும் விடயத்தில் இந்திய அரசு சர்வதேச சமூகத்திற்கு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும் என்பதுடன், இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் பங்களிப்பு மிகவும் அவசியமானது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அகதிகள் மீள்குடியேற்ற செயலணித் தலைவருமான ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் விவகாரக் குழுவில் இணைந்து இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் அங்கு வைத்து இக்கருத்தினை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இலங்கையில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துவதில் அயல் நாடான இந்தியா முழுமையான அக்கறை செலுத்துவது அவசியமாகும். தமிழ் மொழியினை உலகமெங்கும் ஒலிக்கச்செய்யும் முஸ்லிம் சமூகம் தமிழ் மக்களுக்கு கிட்டக்கூடிய நன்மையை ஒத்த சமமான பங்கைப் பெறவேண்டும்.

வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் சர்வதேச மயப்படுத்தப் பட்டிருந்தால், முஸ்லிம்கள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்திருக்கும். ஆனால், அவை உரிய காலத்தில் மேற்கொள்ளப்படாமையே பின்னடைவுக்கு காரணமாகும் என்றார்.

இந்தியாவில் தங்கியிருக்கும் ஒரு வாரத்தில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, எதிர்க்கட்சித் தலைவர் மு.கருணாநிதி ஆகியோருடன் தனியான பேச்சுவார்த்தைகளை தாம் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன மேலும் கூறியுள்ளார். (உ-15)

### இராசி பலன்

**01. 12. 2003**
**(கார்த்திகை 15, திங்கள்)**
**அட்டமி பி.ப.4.34 வரை**
**சதயம் பி.ப . 3.17 வரை**
**இராகுகாலம் 7.44 - 9.14**
**சுபநேரம் 12.14 -01.44**

**கார்த்திகைத் திங்கள்**

**மேடம்**
எதிர்பாராத நன்மை, பொருள் சேர்க்கை, காரிய சித்தி, பெருமையடைதல்.

**இடபம்**
அதிகாரம், இனிய சம்பவம், முயற்சி பலிதம், தூரதேசச் செய்தி.

**மிதுனம்**
சரீர பிரயாசை, எடுத்த காரியம் தாமதமாகும், பிரயாணம், கட்டுப்பாடு.

**கடகம்**
உறவினர் வெறுப்பு, வாகன பயம், தொழில் கஷ்டம், முயற்சி தாமதம்.

**சிங்கம்**
அபூர்வ சந்திப்பு, காரிய அனுகூலம், தெய்வ சிந்தை, கலந்துரையாடல்.

**கன்னி**
ஜனவசியம், புதிய முயற்சி, போசன நன்மை, சத்துரு ஜெயம்.

**துலாம்**
குடும்பக் கவலை, வியாபார நன்மை, திடீர் உதவி, உடல் நலக் குறைவு.

**விருச்சிகம்**
மனப்பதறறம், புதிய திருப்பம், காரிய தாமதம், உறவினர் வருகை.

**தனுசு**
பெரியோரால் மதிக்கப்படுதல், காரிய சித்தி, நல்ல நிகழ்வு, பிரயாணம்.

**மகரம்**
விதண்டாவாதம், அதிகாரம், வீண் செலவு, முயற்சி தாமதம்.

**கும்பம்**
காரிய சிந்தை, பிரயாணம், தேக ஆரோக்கியம், பொருள் சேர்க்கை.

**மீனம்**
மனக் குழப்பம், காரிய தாமதம், உறவினர் சந்திப்பு, போசன சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடபபட்டது) - **வளவன்.**

### சுகாதார சேவை

# ஊழியர்கள் இடமாற்றம் பதில் ஆட்கள் இல்லை

(கொழும்பு)

வன்னிப் பகுதிகளில் உள்ள சுகாதார சேவை ஊழியர்களின் இடமாற்றம் அப்பகுதி ஊழியர்கள் மத்தியில் மனக்கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுகாதார சேவை திணைக்களத்தின் 2004ஆம் ஆண்டிற்கான இடமாற்றங்களுக்கு அமைவாக இவர்களுக்கான இடமாற்றங்கள் அமைந்துள்ள போதிலும்,

இவர்களுக்குப் பதில் ஆட்களை அபபிரதேசங்களில் நியமிக்க திணைக்களம் தவறி விட்டது. இதனால் வன்னியில் உள்ள சுகாதாரசேவை அதிகாரிகள் பெரும் சங்கடத்திற்கு உள்ளாகி வருகின்றனர் என தெரியவருகிறது.

இதேவேளை, வடக்கு-கிழக்கு பகுதிகளில் ஏற்கனவே சுகாதார சேவை ஊழியர்களுக்கு பற்றாக்குறை இருந்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (தி)

# யாழ்.செயலகத்தில் அ.அட்டைகள் தேக்கம்

(சுண்டுக்குளி)

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான ஒரு தொகுதி அடையாள அட்டைகள் யாழ்.செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டும், அவை உரியவர்களால் பெறப்படாமல் அங்கு தேங்கிக் கிடப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

க.பொ.த. (சா/த) பரீட்சையை முன்னிட்டு, யாழ்.குடாநாட்டிலிருந்து தேசிய அடையாளஅட்டைக்காக விண்ணப்பத்தவாகளுக்கான ஒருதொகுதி அடையாள அட்டைகள் ஆட்பதிவுத் திணைக்களத்தால் முற்கூட்டியே யாழ்.செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு கடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் உரியவர்களுக்குத் தெரியப்படுத்தியும், இதுவரை அவ் அடையாள அட்டைகள் உரியவர்களால் பெறப்படாமல் சுமார் 800 அடையாள அட்டைகள் தேங்கிக்கிடப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (தி-110)

# மகாவம்சம்

## தரும் இலங்கைவரலாறு

கலாநிதி க.குணராசா
(செங்கை ஆழியான்)

(29)

### காசாபர்வதப் பாசறை

தனது அரண்களையும் கோட்டைகளையும் வெற்றி கொண்டு துட்டகாமினி தன் சேனா வீரர்களுடன் காசா பர்வதத்தில் பாசறை அமைத்துள்ள தகவல் எல்லாளனுக்குத் தெரியவந்தது. அமைச்சர்களை அழைத்து ஆலோசனை நடாத்தி தளபதி **திக்கஜன** தலைமையில் மறுநாள் எல்லாளனின் படை புறப்பட்டது. துட்டகாமினி தனது தாயாருடனும் ஏனையோருடனும் ஆலோசனை நடாத்தினான். தனது படையை முப்பத்திரண்டு அணிகளாகப் பிரித்து, ஒவ்வொரு அணியிலும் தன்னைப்போன்ற ஒருவனைத் தேர்ந்தெடுத்து வேஷமிட்டு நிறுத்தினான். தானும் ஒரு அணியில் இணைந்து கொண்டான்.

மறுநாள் மன்னன் எல்லாளன் தனனு பட்டத்து யானை **மகாபர்வத**த்தின் மீது ஆரோகணித்து படை சூழ களத்திற்கு வந்தான். தளபதி திக்கஜன் வாளும் கவசமும் ஏந்தி, துட்டகாமினி வருத்த ஒவ்வொரு படையணியையும் துவம்சம் செய்து, துட்டகாமினி நிலைகொண்டிருந்த படையணியை நெருங்கினான். அதனை அவதானித்த சூர நிமிலா குறுக்கிட்டு திக்கஜனோடு போரிட்டு, அவனை தன் வாளினால் வெட்டி வீழ்த்தி, மன்னனைக் காப்பாற்றினான். தமிழர் படை அன்று பெருந் தோல்வியைச் சந்தித்தது.

துட்டகாமினி, பறை முழங்கி அறிவித்தான். ''எல்லாள மன்னனுடன் எவரும் மோதக் கூடாது. நானே அவருடன் தனிச்சமர் புரிவேன்'' துட்டகாமினி கண்டுலன் மீதும், மன்னன் எல்லாளன் மகா பர்வதத்தின் மீது அமர்ந்து, அனுராதபுரத்தின் தென் வாயிலுக்கு வந்தனர். இரு மன்னர்களும் மோதிக் கொண்டனர். எல்லாளன் தனது ஈட்டியை வீச, துட்டகாமினி தன்னைப் பாதுகாத்துக் கொண்டான். துட்டகாமினி தனது யானையைக் கொண்டு, எல்லாளனின் யானையை மோதித் தாக்கச் செய்தான். அவ்வேளை துட்டகாமினி வீசிய ஈட்டி எல்லாளனின் மார்பில் பாய்ந்தது. மன்னனும் யானையும் ஒரேநேரத்தில் நிலத்தில் சரிந்தனர்.

துட்டகாமினி இலங்கையின் சக்கரவர்த்தியாகினான். சேனாவீரர் சூழ்ந்து வர அவன் தலைநகரினுள் நுழைந்தான். பறையொலி எழுப்பி, மக்கள் பிரதானிகள் அனைவரையும் அழைத்து, மன்னன் எல்லாளனின் இறுதிக்கிரியைகளை அரச மரியாதைகளோடு செய்யுமாறு பணித்தான். எந்தவிடத்தில் எல்லாளனின் உடல் மண்ணில் சரிந்ததோ, அதேயிடத்தில் தகனம் செய்ததோடு, அவ்விடத்தில் ஒரு நினைவுத் தூபியையும் (தக்கிண விகாரை) அமைப்பித்தான். அந்த நினைவுச் சின்னத்தைக் கடப்பவர்கள் அமைதி காக்குமாறும், வாத்தியவொலிகள் எதுவும் அவ்விடத்தைக் கடக்கும் போது எழக்கூடாதெனவும் கட்டளையிட்டான். அதன் பின்னர் இலங்கையில் பல பகுதியிலும் இருந்த முப்பத்திரண்டு தமிழ்ச்சிற்றரசர்களை வெற்றி கொண்டு இலங்கை முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டான்.

### பாலுகன் படையெடுப்பு

விஜித புரக் கோட்டையும், தளபதி திக்கஜனின் மரணமும் நிகழ்ந்ததும், எல்லாளன் தனது மருமகன் பாலுகனுக்குப் படையுடன் வருமாறு செய்தி அனுப்பினான். அவனுடைய படை எல்லாளன் இறந்த ஏழாம் நாள் மகா தீர்த்தத்தை வந்தடைந்தது. அப்படையை துட்டகாமினியின் வீரர்கள் தோல்வியடையச் செய்தனர்.



துட்டகாமினி

### பாட்டுடைத் தலைவன்

மாகவம்ச ஆசிரியர் துட்டகாமினியைத் தன் காவியத்தின் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளார். மகாவம்சத்தின் 37 அதிகாரங்களில் 22ஆம் அதிகாரம் தொட்டு 32 ஆம் அதிகாரம் வரையிலான 11 அதிகாரங்கள் துட்டகாமினியின் அரசியல் பணிகளுக்காகவும் சமயப் பணிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. அவனுடைய அரசியல் பணிகளைக் கூற நான்கு அதிகாரங்களை எடுத்துக் கொண்ட மகாவம்ச ஆசிரியர், அவனுடைய சமயப்பணிகளை விபரிக்க ஏழு அதிகாரங்களைப் பயன்படுத்துகிறார். மகாதூபி எனப்படும் ருவான் வெலிசாயவை நிறுவுவதற்கு அவன் ஆற்றிய பணிகளை விளக்க நான்கு அதிகாரங்கள் செலவிடப்பட்டுள்ளன.

தமிழர்கள் மீதான அசூசையையும், அவர்களை வெற்றிகொள்ள வேண்டுமென்ற விருப்பையும் துட்காமினியின் பெற்றோர் காக்கவண்ணதீசனும், விகாரைதேவியும் சிறுவயதிலிருந்தே அவன் நெஞ்சில் கனலாக எரிய விட்டுள்ளனர். விகாரைதேவி நேரடியாகவும், காக்கவண்ணதீசன் எதிர் மறையாகவும் அக்கனலைக் கிளறி அணையாது பார்த்துக் கொண்டனர். ''தமிழர் மீது படையெடுக்காதே, மகா கங்கைக்கு இப்பாலுள்ள நிலமே போதும்'' என்று காக்கவண்ண தீசன் கூறுவதன் மூலம் அதற்கு மாறான விருப்பினைத் துட்டகாமினியின் மனதில் விதைத்தான். பிளவுபட்டிருந்த உருகுணையை ஒன்றாக்கியதன் மூலமும் பத்து மல்லர்களையும் ஆயிரக்கணக்கான சேனாவீரர்களையும் அவனே உருவாக்கினான். தீசனின் தலைமையில் தீகவாவியில் ஒருபடையணியையும், தன்னொரு மகன் திக்காபயனின் தலைமையில் மகா கங்கைக்கரையில் ஒரு படையணியையும் நிறுத்தியிருந்தான். துட்டகாமினிக்கு ஆட்சி கிடைக்கவேண்டுமென்பதில் கவனமிருந்ததால் சகோதரர்களைப் பிரித்து வெவ்வேறிடங்களில் இருக்க வைத்தான். திக்காபயனின் தாய், காக்கவண்ணதீசனின் முதல் மனைவி கதிர்காமச் சத்திரிய குலப்பெண், தமிழ்ப் பெண் அதனால் திக்காபயனுக்கு அரசுரிமை கிடைக்கக் கூடாதென்பது காக்கவண்ணதீசனின் விருப்பம். அதனால் தான், திக்காபயன், எல்லாளனுடன் சேர்ந்து உருகுணையை அவன் மூலம் பெறவிரும்பியிருக்க வேண்டும். எனவே தான் மகாகங்கைக் கரையில் நான்காவது அரணிலிருந்த திக்காபயனையும் அவனது வீரர்களையும் துட்டகாமினி எல்லாளன் மீதான படையெடுப்பின் போது கொல்ல நேர்ந்துள்ளது. (தொடரும்)

# மட்டு. மாவட்ட அபிவிருத்திக்கு இவ்வாண்டு 50கோடி செலவு

## அரச அதிபர் மோனகுருசாமி தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங் களை மீளக் கட்டியெழுப்புவதற்கு இவ்வாண்டு சுமார் 50கோடி ரூபா பயன் படுத்தப்பட்டுள்ளது என அரச அதிபர் ஆர்மோனகுருசாமி தெரிவித்துள்ளார்.

மாவட்ட புனரமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பொதுமக்களின் அடிப் படைத்தேவைகளான கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் வீதிப்புனரமைப்புப் போன்ற துறைகளில் இந் நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச நிதி நிறுவனங்களான நியாப் திட்டத்தின் கீழ் 15 கோடி ரூபாவும், டேவா திட்டத்தின் கீழ் 20 கோடி ரூபாவும், நிக்கொட் திட்டத்தின் கீழ் 10 கோடி ரூபாவும் மற்றும் வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து சுமார் 3கோடி ரூபாவும் இதற்காக செலவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மாவட்ட வீதி அபிவிருத்திக்கென நோர்வே அரசு 100 மில்லியன் ரூபாவை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

(தி-60)

# இடை நிறுத்தப்பட்ட நிவாரணத்தை வழங்க அரச அதிபர் உறுதி

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கின் அபிவிருத்தி தொடர்பான உயர்மட்ட மாநாடு நேற்று முன்தினம் குடத்தனை விலாங்காடு பாடசாலையில் நடைபெற்றது.

இமமாநாட்டில் யாழ்.அரச அதிபர் எஸ். பத்மநாதன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்கே.சிவாஜிலிங்கம், மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.பி.வேலாயுதபிள்ளை உட்பட பல திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டின் போது மின் விநியோகம் வீதி திருத்தம் என்பன முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும், இடைநிறுத்தப்பட்ட நிவாரணத்தை மீளவும் வழங்க வேண்டுமெனவும் யாழ்.அரச அதிபரிடம் பொதுமக்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதனை ஏற்றுக் கொண்ட அரச அதிபர் இடைநிறுத்தப்பட்ட நிவாரணத்தை மீள வழங்க உறுதியளித்துள்ளார்.

(தி-43)



கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் யாழ். கலாசார உத்தியோகத்தர் கலையகம் நடத்தும் மாவட்ட வருடாந்தக் கலா சார விழாவின் முதலாம் நாள் நிகழ்வின்போது வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமான பண்பாட்டுப பேரணி.

# தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதிக்கான நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2004ஆம் ஆண்டு கல்வியாண்டுக்கு மாணவர்களை அனுமதிக்கும் பொருட்டிலான நேர்முகத் தேர்வுக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் பாடநெறி ரீதியாக வருமாறு:-

**நாடகமும் அரங்கியலும்**

கோ.மதனகோபன் - யாழ்ப்பாணம், அ.அஜித்சஞ்சீவ்- அரியாலை, து.இந்திரஜித் - கந்தரோடை, மு.சுஜிதா - மல்லாகம் கிழக்கு, கி.கிஜோஜினி -ஊரெழு மேற்கு, செ.சியாமளா - பண்டத்தரிப்பு, கு.வசீகுலன் - யாழ்ப்பாணம், சி.நிரஞ்சதுர்க்கன் - உடுவில்,

வி.மதிவதுனன் - நவக்கிரி, ரா.அஞ்சனா - உடுவில், க.ஜெயப்பிரியா - ஆனைப்பந்தி, உ.கிறிஸ்ணகுமார் - பருத்தித்துறை, சோ.ஸ்ரீபாலா - சுன்னாகம் தெற்கு, க.மோகனதீபன், யோ.லட்ஸ்மன் சாள்ஸ் - எழுவைதீவு, ப.பிரதர்சன் - அளவெட்டி கிழக்கு, பு.துசிதா - அரியாலை, கெ.வைமன் ராஜ் - பண்டத்தரிப்பு.

சி.அனுசன் - தெல்லிப்பழை கிழக்கு, சி.ஏ.அமலா நிலோஜினி - பளை, சி.யசோதா - வட்டு தென்மேற்கு, சி.கோசலா - அல்வாய் வடக்கு, ரா.கங்கைஅமரன் - இணுவில் மேற்கு, தி.சுரேஸ்குமார் - தெல்லிப்பழை, மு.உஷாந்தினி - தெல்லிப்பழை, சி.ரமணன் - மல்லாகம், ஆ.சுகுணா - காங்கேசன்துறை.

த.சுகிர்தா - திருநெல்வேலி, கு.லெனின் குமார் - நல்லூர், கி.கஜந்தன் - சுன்னாகம், பூ.ஜிசிதா - ஏழாலை கிழக்கு, அ.அஜந்தமாலா - ஏழாலை கிழக்கு, பே.சுதர்சினி - புலோலி, ஞா.திரோணன் - அளவெட்டி கிழக்கு, செ.திலீபன் - ஊரெழு மேற்கு, ம.கஜேந்திரா - அரியாலை மேற்கு, க.ஜீவா - நவாலி வடக்கு.

பா.பிரதீபன் - யாழ்ப்பாணம், ம.சிவராசா - சுன்னாகம் மேற்கு, கா.ரதீஸ் - அல்வாய் மேற்கு, க.தர்சினி - சுண்டுக்குளி, கு.செல்வகுமார் - ஏழாலைதெற்கு, ம.சுதாகரன் - ஏழாலைமேற்கு, ஆர்.வின்சன் ஆசின் - பாசையூர், வே.முருகதாஸ் - மருதங்கேணிதெற்கு, ம.ரமேஷ் - உரும்பிராய் தெற்கு, இ.விஜிதா - இணுவில் கிழக்கு, பா.கஸ்தூரி - சங்கானை, சி.சிறீகஜன் - மயிலிட்டி வடக்கு, க.அரியரட்ணம் - ஏழாலை தெற்கு, தி.திவாகரன் - அல்வாய வட மேற்கு, செ.பிரதீப்சன - கொய்யாத்தோட்டம், கோ.கேதீஸ்வரி - 1ஆம் வட்டாரம் நெடுந்தீவு, த.லதா - சண்டிலிப்பாய்.

**தொழில்நுட்பம்**

ரா.ஜெயலக்ஷ்மி - தெல்லிப்பழை, க.சுகிர்தன் - மல்லாகம், சி.பாலமுரளி - கரவெட்டி மத்தி, சி.நிரஞ்சதுர்க்கன் - மானிப்பாய், கு.மெய்யழகன் - உடுப்பிட்டி, க.ரவீந்திரன் - மீசாலை, சி.ரமணன் - மல்லாகம், க.வசீகரன் - கந்தர்மடம், வி.நில்சன் - இருபாலை, சி.பானுகோபன் - நல்லூர் வடக்கு.

ஐ.ஐங்கரன் - சுதுமலை வடக்கு, செ.கிருஷ்ணராணி - புலோலி தெற்கு, ரா.கஜேந்திரன் - இமையாணன் மேற்கு, மு.சுரேந்திரராஜா - கோப்பாய் தெற்கு, ம.தமயந்தினி - உடுவில் தெற்கு, த.ஜெயாகரன் - கொக்குவில் மேற்கு, கோ.லதாஜினி - அளவெட்டி வடக்கு, த.கவிதா - சுன்னாகம், பி.ரி.றோய்டனிஸ்ரன் - பண்டத்தரிப்பு.

மு.முதியா - அல்வாய் கிழக்கு, ம.சுதாகரன் - சுன்னாகம், சி.ஸ்ரீகஜன் - மயிலிட்டி வடக்கு, ந.உஷாநந்தினி - இளவாலை, சு.நகுலேஸ்வரன் - சுதுமலை வடக்கு, தி.கஜேந்தி - பன்னாலை, க.லாவண்யா - தெல்லிப்பழை, சி.சுபேசன் - மல்லாகம், செ.சுதாகர் - கோப்பாய் தெற்கு, தெ.றூபநிஷாந்தி - நல்லூர்.

**இந்து சமயம்**

பொ.தனயந்தி - சங்கானை, சி.மாலதி - கரவெட்டி கிழக்கு, லோ.தர்சிகா - இணுவில் கிழக்கு, சி.சிவரஜனி - கொடிகாமம், சி.ராஜ்குமார் - அச்சுவேலி, க.செல்வா நந்தி - மானிப்பாய், இ.ராஜகுமார் - இருபாலை கிழக்கு, க.இளங்கோவன் - கொடிகாமம், கை.ராஜினி - கைதடி, பி.அஜைஷந்திரனி - ஏழாலை கிழக்கு.

நா.ராஜவதனி - யாழ்ப்பாணம், மு.கோமேஸ் - நயினாதீவு, ம.கீர்த்திபா - வண்ணார்பண்ணை, ந.சஜீபன் - சுன்னாகம், சி.யாழினி - ஆனைக்கோட்டை, தி.ராஜினி - புத்தூர் மேற்கு, செ.செல்வநாயகி - ஆனைக்கோட்டை, ப.ராஜகுமார் - நீர்வேலி தெற்கு, தே.தயாபரன் - கொட்டடி யாழ்., த.கிருஸ்ணவேணி - அல்வாய், வே.ஸ்வர்ணா - வல்வெட்டித்துறை.

க.பத்மினி - புலோலி தெற்கு, அ.வனிதா - அனலைதீவு, க.சுபாலினி - ஆனைக்கோட்டை, ம.மைதிலி - நீர்வேலி தெற்கு, செ.ஷகிலா - நீர்வேலி தெற்கு, தி.வாசுகி - புலோலி வடமேற்கு, ப.மதுரா - ஆவரங்கால், கி.குருகான்சி - யாழ்ப்பாணம், இ.கிருஷாந்து - நல்லூர்.

ந.வித்யா - பருத்தியடைப்பு, வி.அபிராமன் - இணுவில், சி.துளசி - நீர்வேலி வடக்கு, மா.விஜிதா - புலோலி, இ.வசந்தினிதேவி - கைதடி வடக்கு, தே.ரமீலா - ஊரெழு கிழக்கு, ம.அனுசுலா - மானிப்பாய், ச.பிருந்தா - கைதடி கிழக்கு, வி.சுதர்சினி - அல்வாய் வடமேற்கு, இ.நளாயினி - கோண்டாவில் கிழக்கு, சு.சஜீபன் - தாவடி வடக்கு.

**தமிழ்**

பொ.தனயந்தி - சங்கானை, சி.மாலதி - கரவெட்டி கிழக்கு, து.துஷ்யந்தினி - கரவெட்டி தெற்கு, ம.ஷைலா - சாவகச்சேரி, மு.ஜெயதாசன் - வயாவிளான், இ.நரேந்திரா - ஆவரங்கால், க.செல்வானந்தி - மானிப்பாய், தி.கயிஸ்திரீ - நீர்வேலி தெற்கு, நா.தேவதர்சினி - செம்பியன்பற்று, இராஜ்குமார் - இருபாலை கிழக்கு.

க.இளங்கோவன் - மந்துவில் மேற்கு, அ.ரவீந்திரன் - நீர்வேலி, தி.வாசுகி - குப்பிளான் தெற்கு, நா.ராஜவதனி - யாழ்ப்பாணம், த.யசோதா - கரவெட்டி கிழக்கு, தே.தயாபரன் - கொட்டடி, வே.சுவர்ணா - வல்வெட்டித்துறை, பே.ஜசிந்தா - தாளையடி, அ.வனிதா - அனலைதீவு, றொ.அன்ரனிஸ்ராயூலியஸ் - குடத்தனை.

க.சுபாழினி - ஆனைக்கோட்டை, ம.மைதிலி - நீர்வேலிதெற்கு, த.யமுனா - அளவெட்டி, எஸ்.கௌதமன் - சுண்டுக்குளி, ரா.கிருசாந்தி - நல்லூர், த.பிரியதர்சினி - பருத்தித்துறை, ந.வித்தியா - ஊர்காவற்றுறை, ம.சுபாஸ்ஜன் புன்னாலைக்கட்டுவன் தெற்கு, க.பவதாரணி - இணுவில் மேற்கு, க.அமலினி - சாவகச்சேரி, அ.அனற்கொலினஸ் - குருநகர்.

**நூலக விஞ்ஞானம்**

சி.செந்தில்குகன் - புத்தூர் மேற்கு, க.கௌசிகா - சங்கத்தானை, ம.அபிராமி - அரியாலை, சி.சிவதரி - கைதடி வடக்கு, மெ.மேரியூதிஸ்ரா - குருநகர், எவ்.எக்ஸ்.நிர்மின் - அல்வாய் வடமத்தி, க.தனுஷா - சண்டிலிப்பாய் வடக்கு, க.வினோதிகா - அரியாலை, சி.தேவமனோகரி - வட்டுக்கோட்டை.

ம.சிந்துஜா - கொக்குவில் மேற்கு, எஸ்.வி.வதனிரஞ்சனி - இணுவில் கிழக்கு, க.மதனகரன் - ஆனைக்கோட்டை, ஆர்.பி.வன்கலிஸ்ராபிரத்மை - வட்டுக்கோட்டை, வ.சாருமதி - கொக்குவில் கிழக்கு, ரா.சிவஜோதி - சண்டிலிப்பாய், ம.அனுஷா - சிறுப்பிட்டி மேற்கு, வி.எம்.மரிற்றா - ஆனைக்கோட்டை, ச.சிவதர்ஷனி - புலோலி தென்மேற்கு, ம.நிருபா - புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

செ.பாலரூபினி - திருநெல்வேலி மேற்கு, ரா.சிறீதரன் - சுழிபுரம் தெற்கு, ஜே.றொசினி - ஆனைக்கோட்டை, கி.கிருஹான்சி - யாழ்ப்பாணம், த.சங்கர் - புலோலி தெற்கு, த.பிரியதர்சினி - பருத்தித்துறை, எவ்.எக்ஸ்.டொலிஜீன் - அல்வாய் வடமத்தி, ரா.இளவரசி - பருத்தித்துறை, சு.கமதி - இணுவில் தெற்கு, சி.கௌசிகா - வரணி.

பா.சிந்துஜா - கந்தர்மடம், சி.சுமிதா - தெல்லிப்பழை, கு.துஷ்யந்தி - சுண்டுக்குளி, தி.அஸ்வினி - வண்ணார்பண்ணை, தி.சயந்தினி - பண்டத்தரிப்பு, சி.ருபவாகினி - தும்பளை, மா.நர்மதா - கைதடி, வி.யோகேஸ்வரன் கரணவாய், சி.கார்த்திகா - கொக்குவில், ஜெ.ஜெயநந்தருபி - நாயன்மார்க்கட்டு.

அ.மகாதேவி - கொல்லன்கலட்டி, இ.கோகிலன் - உரும்பிராய், ச.சோபிதன் - யாழ்ப்பாணம், தி.வாசுகி - குப்பிளான் தெற்கு, எவ்.எக்ஸ்.சுபாஜினி - தையிட்டி, பா.சத்யா - கொடிகாமம், ஸ்ரீ.ஜெயசாந்தினி - பருத்தித்துறை, தை.சுசிதா - புன்னாலைக்கட்டுவன் தெற்கு, த.தயானி - சுண்டுக்குளி, சி.சுபாஜினி - கரந்ரோடை, அ.அரிபிரியா - சித்தன்கேணி.

**விஞ்ஞானம்**

ப.அனுஷா - ஆனைக்கோட்டை, வ.நிஷாந்தினி - கல்வயல், சி.மயூரன் - உடுவில் கிழக்கு, லோ.செந்தூரன் - சுதுமலை தெற்கு, க.கம்ஷ்நந்தி - யாழ்ப்பாணம், வி.முருகதாஸ் - அல்வாய் கிழக்கு, நா.நந்தினி - சுழிபுரம், சி.தமிலா - மீசாலை வடக்கு, வி.மணிவாசன் - பருத்தித்துறை, பா.நிருபராஜா - கொடிகாமம்.

சி.யாழினி - கட்டுடை, சி.வினோதா - கரவெட்டி மத்தி, ம.பாமினி - உடுவில், கு.சைலஜா - வரணி, சி.ரஞ்சிதா - கொக்குவில் கிழக்கு, பூ.அஞ்சனா - கொக்குவில் வடமேற்கு, த.சுமிதா - கொக்குவில் மேற்கு, எஸ்.பாலஜீவன் அராலி வடக்கு, ஞா.ராஜேதயன் - கோப்பாய் தெற்கு, வ.சேணுகா - அராலி தெற்கு.

போ.சயந்தன் - நெடுந்தீவு, கு.விமல்ராஜ் - கைதடிதெற்கு, வ.ஜங்கரன் - கொடிகாமம், பா.பிரசாந்தி - யாழ்ப்பாணம், ரி.ரோசினி - யாழ்ப்பாணம், ப.வசீகரன் - கந்தர்மடம், பா.கோபிநாத் - கல்வியங்காடு, ப.சியாமினி - நீர்வேலி தெற்கு, த.சந்திரிகா - பளை, க.சங்கீதா - நுணாவில் மேற்கு.

பா.மதிவதனன் - ஏழாலை மேற்கு, ரா.வானதி - இமையாணன் மேற்கு, ந.வரதரூபி - சுன்னாகம் மேற்கு, சு.பிரேமி - நல்லூர், தே.கேமலோஜினி - சுன்னாகம், பா.பிரகலாதன் - இடைக்குறிச்சி, த.செந்தூரன் - துன்னாலை தெற்கு, ரா.நிவேதினி - யாழ்ப்பாணம், கு.அபிராமி - யாழ்ப்பாணம், பா.பாலசோபனா - மட்டுவில் தெற்கு.

செ.நிதியா - மாதகல், ப.கார்த்திகேயன் - வண்ணார்பண்ணை மேற்கு, ப.அருணன் - நவாலி கிழக்கு, ந.நயனா - கரணவாய் தெற்கு, சி.சுதர்சன் - அல்வாய் வடக்கு, ம.சுவர்ணா - கரவெட்டி, பா.சிவா பாழினி - ஏழாலை வடக்கு, மு.மனோகரன் - அளவெட்டி, செ.சுதர்சினி - கந்தர்மடம், ஜெ.சிந்தியாவேஜினி - பருத்தித்துறை.

ர.கமலேஸ்வரி - கொடிகாமம், அ.ஜெனிஜெசிகா - யாழ்ப்பாணம், த.கிருசாந்தினி - இமையாணன், ந.யமுசியா - யாழ்ப்பாணம், த.தாரணி - பருத்தித்துறை, ந.பிரதீபா - கொடிகாமம், சி.உஷா - நல்லூர், ரா.தயாபதி - மல்லாகம், க.பிரதீபன் - காரைநகர், செ.ராஜ்குமார் - இளவாலை.

த.பிரதீபன் - கரணவாய் மத்தி, இ.அனிற்றா யசோதரா - ஏழாலை தெற்கு, சி.பிரதீபா - அச்சுவேலி, ச.பவித்திரா - இணுவில், தே.சுகுமாரன் - யாழ்ப்பாணம், ஐ.ரமேஸ் - சங்குவேலி தெற்கு, ரா.நிர்மலா - சுழிபுரம், சி.ஆரபி - கொக்குவில் மேற்கு, பா.சிவசாந்தினி - அராலி கிழக்கு.

(மிகுதி நாளை)

# அரசாங்கம் ஜனாதிபதியுடன் பேசினாலும் தேசிய அரசாங்கம் வெகு தொலைவில்

## கலாநிதி சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான செயற்பாடுகள் தொடர்பாக சமரவிக்கிரம தித்தவெல குழுவினர் ஒரு பொது முடிவிற்கு வருவர் என பொதுஜன ஐக்கிய முன்னணி நம்பிக்கை கொண்டுள்ளது. ஆனால், தேசிய அரசாங்கம் அமைப்பது வெகு தொலைவில் உள்ளது என்றும் அக்கட்சி கூறியுள்ளது என கட்சியின் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் 15ஆம் திகதி வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகின்ற இக் குழுவின் யோசனைகள் பற்றி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் கலந்துரையாடல்களை நடத்த வுள்ளனர்.

தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றி ஊடகங்களால் உருவாக்கப்பட்ட ஊகங்கள் அனைத்தையும் நான் நிராகரிக்கின்றேன். அத்துடன், தற்போது முக்கிய விடயங்களில் பொது உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கு இக் குழுவினர் பெரும் சவாலை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேலும், மக்கள் விடுதலை முன்னணியுடன் சுதந்திரக் கட்சி கூட்டணி அமைப்பது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், இதில் இரு கட்சிகளுக்கும் இடையில் முரண்பாடு எதுவும் இல்லை. சமாதானத்தை முன்னெடுப்பதற்காகவே ஐக்கியதேசிய முன்னணி அரசுடன் கூட்டுச் சேர்ந்து அரசியல் யாப்பின் படி நடைபெறுகின்றன.

அத்துடன் நிறைவேற்று அதிகாரத்திற்கும், பாராளுமன்றத்தின் அதிகாரத்திற்கும் இடையில் உடன்பாட்டை ஏற்படுத்தவுமே அரசுடன் கூட்டுச்சேருகின்றது.

இதேவேளை, மக்கள் விடுதலை முன்னணியுடனான கூட்டு அரசியல் ரீதியானது.

மக்கள் விடுதலை முன்னணிக்கும், சுதந்திரக் கட்சிக்குமிடையான கூட்டணி பற்றிய சட்டரீதியான வரையுகள் சிறிது மாற்றங்களுடன் நேற்று முன்தினம் ரில் வின் சில்வாவிடம் கையளிக்கப்பட்டது என அவர்மேலும் தெரிவித்தார்.

(தி-6)

# தேநீர்ச்சாலை உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(ஊர்காவற்றுறை)

வேலணை வங்களாவடிச் சந்தியில் உள்ள தேநீர்ச்சாலை ஒன்றில் வைத்து எரிபொருள் விற்பனை செய்து வந்த குற்றத்திற்காக சம்பந்தப்பட்ட தேநீர்ச்சாலை உரிமையாளருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தேநீர்ச்சாலையில் வைத்து எரிபொருள் விற்பனை செய்தல், பற்றிசாஜ் செய்து கொடுத்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், இதனால் உணவுச்சாலையின் சுகாதாரம் பாதிப்படைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியே சம்பந்தப்பட்ட உரிமையாளருக்கு எதிராக வேலணைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

(தி-75)

# நாட்டின் பொருளாதாரத்துக்கு கைத்தொழில் துறை பங்களிப்பு

## நிதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்திற்கு உள்ளூர் கைத்தொழில் துறை பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது. தற்போதைய வரவு-செலவுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டதாக நிதி அமைச்சர் கே.என்சொக்சி தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசியக் கைத்தொழில் சம்மேளனத்தின் 42 ஆவது வருடாந்த மாநாடு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போது, அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இதன் காரணமாகவே உள்ளூர் கைத்தொழில் துறைக்கு பலதரப்பட்ட அனுகூலங்கள் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், வர்த்தக சம்மேளனங்களின் பிரேரணைகளின் அடிப்படையில் மேலும் பல நன்மைகள் பற்றி அறிவிக்கப்படவுள்ளன.

மனித வளங்கள், நன்மைகள நிதியம் சம்பந்தமான சட்டம் பாராளுமன்றில் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தனியார் துறையின் உதவியுடன் வேலையற்ற இளைஞர்களுக்கு தொழில் பயிற்சிகள் அளிக்கவென உத்தேசத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(தி-60,10)

# பருத்தியடைப்பு ஊருண்டியில் 50 வீட்டுத் திட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு மற்றும் ஊருண்டிப் பகுதிகளில் மீனவர் வீட்டுத்திட்டத்தின் கீழ் 50 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

மேற்படி பகுதிகளில் உள்ள குடியிருப்பு வசதிகளற்ற மீனவக் குடும்பங்களுக்கே இவ்வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதனடிப்படையில் மிகவும் வறிய குடும்பங்கள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்பட்டுவருகின்றன.

(தி-75)

# வட - கிழக்கு சுற்றுச் சூழல் பற்றிய நான்கு நாள் சர்வதேச கருத்தரங்கு

## இன்று யாழ்.பல்கலையில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கின் சுற்றுச் சூழல் முகாமைத்துவம் தொடர்பான நான்கு நாள் சர்வதேச கருத்தரங்கு இன்று தொடக்கம் எதிர்வரும் 4ஆம் திகதி வரை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைககழகம், பொருமிய மதியுரையகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கிற்கான நிதியுதவியை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் வழங்கியுள்ளது. நாள் ஒன்றிற்கு இரண்டு அமர்வுகள் வீதம் மொத்தமாக எட்டு அமர்வுகளாக இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இரண்டு தசாப்த காலமாக நீடித்த போரின் விளைவாக சமநிலை இழந்து பல்வகைச் சிதைவுக்கு உட்பட்டிருக்கும் சூழல் நிலைமைகளை கருத்திற்கொண்டு. சீர்தருத்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியப்பாட்டின் அடிப்படையில் இப்பிரதேசங்களின் இன்றைய சூழல் நிலைமைகளை ஆய்வு செய்து நிலவுகின்ற பிரச்சினைகளை இனங் கண்டு, பொருத்தமானதீர்வுகளை முன் வைப்பதே இத்தொடர் கருத்தரங்கின் முதன்மை நோக்காகும். இத்துறையில் நிபுணத்துவம் பெற்ற வெளி நாட்டு, உள்நாட்டு நிபுணர்கள் இதில் ஆளணியினராகப் பங்கேற்கவுள்ளனர்.

இந்நிகழ்வை வைபவ ரீதியாக பட்டபின்படிப்பு பீட பீடாதிபதி பேராசிரியர் க.சிற்றம்பலம் தொடக்கி வைத்து தலைமை தாங்கவுள்ளார்.

இன்றைய தொடக்க நிகழ்வில் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியா சு.மோகனதாஸ், ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி மிக்குவல்பேர்மியோ மற்றும் ஜப்பானைச் சேர்ந்த ஹியாஷி நக்கமுரா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் கலாநிதி யோய் மகேஸ்வரன் சிறப்புரையாற்றவுள்ளார்.

''இயற்கை வளங்களை இனங்காணும்பட்டியல்'' எனும் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்ட இன்றைய மாலை அமர்வுக்கு கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எம்.எஸ்.மூக்கையா தலைமை தாங்கவுள்ளார். கலாநிதி சிறில் விஜயசுந்தரா, பேராசிரியர் சாள்ஸ் சந்தியாப்பிள்ளை ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கருத்துரை நிகழ்த்தவுள்ளதுடன் மேலும் எட்டு ஆய்வார்கள் பங்கு பற்றவுள்ளனர்.

இரணடாம் நாளான நாளைய காலை அமர்வு ''மூலவள முகாமைத்துவமும அதன் பரிபாலனமும்'' எனும் மையப் பொருளை அடிபபடையாகக் கொண்டது. பேராசிரியர் கே.குமாரவடிவேலின் தலைமையின் கீழ் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொள்ளும் பேராசிரியர் போ.லார்சென்னின் உரை இடம்பெறும். மேலும் இத்தொடரில் ஆறு கட்டுரைகள் சமர்பிக்கப்படவுள்ளன.

கலாநிதி ஏ.கந்தையாவின் தலைமையின் கீழ் நடைபெறவுள்ள நாளைய மாலை நிகழ்வுகள் ''இயற்கை வளங்களில் மனித தாக்கம்'' எனும் கருப்பொருளை மையமாகக் கொணடது. இதில் கலாநிதி என்.ஸ்ரீஸ்கந்தராஜா விசேட அதிதியாகக் கலந்து சிறப்புரையாற்றவுள்ளார். இந்நிகழ்வில் ஏழு நிபுணர்கள் தமது ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்கவுள்ளனர்.

மூன்றாம் நாளின் காலை அமர்வு ''இயற்கைவள மாசுபாடு'' மற்றும் ''பொதுச் சுகாதாரம்'' எனும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டது. பேராசிரியர் றொகான் இராஜபக்ஸ தலைமை தாங்கவுள்ள இக்கருத்தரங்கில் சிறப்பு அதிதியான பேராசிரியர் என்.சண்முகரத்தினத்தின் உரை இடம்பெறவுள்ளது. அத்துடன் ஆறு ஆய்வுக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

அன்றைய மாலை அமர்வின் மையக கருத்து ''சூழல் முகாமைத்துவத்தில் நவீன சாதனங்கள்'' என்பதாகும். கலாநிதி பி.லோகநாதனின் தலைமையின் கீழ் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பேராசிரியர் அன்டேர்ஸ் நோர்மன் சிறப்பு அதிதியாக பங்கு பற்றுவதுடன் ஏழு ஆய்வாளர்கள் தமது கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

முதல் மூன்று நாட்களிலும் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் சார்பான குழுநிலைக் கருத்துரையாடல் நான்காம் நாளான வியாழனன்று காலை இடம்பெறுவதுடன், கலந்துரையாடலின் பெறுபேறுகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மாலை நிகழ்விற்கு கலாநிதி யோய் மகேஸ்வரன் தலைமை தாங்கவுள்ளார். இந்நிகழ்வின் முடிவில் இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் சூழல் முகாமைத்துவம் தொடர்பான செயல்திட்டங்கள் வடிவமைக்கப்படவுள்ளதுடன பேராசிரியர் என்.ஸ்ரீஸ்கந்தராஜா தொகுப்புரையை வழங்கவுள்ளார். கலாநிதி சி.சிவச்சந்திரனின் நன்றியுரையுடன் கருத்தரங்கு நிறைவெய்தவுளளது.

(உ-16)

# ஸ்ரீ.சு.க. - ஐ.தே.க. பேச்சுக்களை முஸ்லிம் காங்கிரஸ் அவதானிக்கிறது

## கட்சியின் தவிசாளர் வஸீர் சேகுதாவுத் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் நியமிக்கப்பட்ட சமரவிக்கிரம தித்தவெல்ல குழுவினருக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளையும் எடுக்கப்படுகிறன்ற தீர்மானங்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உன்னிப்பாக அவதானித்து வருகின்றதாக கட்சியின் தவிசாளரும் வீடமைப்புப் பிரதி அமைச்சருமான வஸீர் சேகுதாவுத் தெரிவித்துள்ளார்.

அகமட் ஃபொறிட் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸின் ஏறாவூர் பிரதேச மத்திய குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

5முக்கிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டே சமரவிக்கிரம தித்தவெல்ல குழுவினர் பேசசுவார்த்தைகளை நடத்தி வருகின்றனர்.

இதில் ஒரு அம்சமாக தேர்தல் முறையை மாற்றி அமைப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டு வருவதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடாகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தகவல் வெளியிட்டுள்ளார்.

சிறுபான்மைக் கட்சி என்ற வகையில் இது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அச்சம் கொண்டுளளது.

அவ்வாறு தேர்தல் முறையில் சீர்திருத்தங்களை ஏற்படுத்தப் போவதாகக் கூறிக்கொண்டு இரு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து, தற்போது 5சத வீதமாக இருக்கின்ற வெட்டுப்புள்ளியை 12சத வீதமாக அதிகரித்துவிட்டால், இலங்கையின் அரசியலில் சிறுபான்மை கட்சிகளின வரலாறே முடிந்துவிடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(தி-61,10)

# தனியார் பஸ் உரிமையாளர்கள் போராட்டம் நடத்த முஸ்தீபு

(கொழும்பு)

அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளது.

இதேவேளை,தென் மாகாண தனியார் பஸ் சேவை உரிமையாளர்கள் கடந்த 27ஆம் திகதி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேசிய போக்குவரத்துக் கொள்கைகளை ஏற்படுத்துதல், புதிய பஸ் சேவைகளுக்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுவதை ரத்துச் செய்தல், பொலிஸாரும் போக்கு வரத்து அதிகாரிகளும், தனியார் பஸ் சேவைகளுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய வகையில் நடந்து கொள்ளல், கட்டணங்களை அதிகரிக்காதிருத்தல், சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்கும் இலவசப் பயிற்சி அளித்தல் போன்ற பலகோரிக்கைகளை முன்வைத்தே இவ்வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் உதவித் தலைவர் ஸ்ரான்லி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை. இலங்கைத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ண மற்றும் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு ஆகியோர்,

இனறு ஆரம்பமாகவுள்ள கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சை மாணவர்களின் போக்கு வரத்து நலன் கருதி போராட்டங்களை நிறுத்தி உதவுமாறு தனியார் பஸ் உரிமையாளர்களை கேட்டுள்ளனர்.

(தி60,10)

# வவு. பொது மருத்துவமனையில் ஆளணிப் பற்றாக்குறை

(கிளிநொச்சி)

வவுனியா ஆதார மருத்துவ மனை பொது மருத்துவ மனையாக தரமுயர்த்தப் பட்ட பின்னரும் அங்கு தொடர்ந்து பெரும் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதனால், வெளிநோயாளர் பிரிவுகளில் திருப்தியான சேவையினை வழங்க முடியாதுள்ளதாகவும் இந்நிலையால் நோயாளர்கள் பெரும் அசௌகரிங்களுக்குள்ளாவதாவும் வைத்தியசாலை வட்டராங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

அத்துடன் இங்கு பெரும் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக மேற்படி வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஆதார வைத்திய சாலையாக இருந்த வவுனியா வைத்தியசாலை, இவ்வாண்டு முற்பகுதியில் பொது வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப் பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(தி-64.10.)

# செய்தித் துளிகள்

### விழிப்புணர்வு படக் காட்சி

(சுதுமலை)

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள இளவாலை மற்றும் மாதகல் பகுதிகளில் வைத்து சுகாதாரத் திணைக்கள சுகாதாரக் கல்வி வாகனம் மூலம் தொற்று நோய் தடுப்பு, போசாக்கு போன்ற விடய்ங்கள் தொடர்பான விழிப்புணர்வு படக்காட்சிகள் கடந்த வாரம் காண்பிக்கப்படடன.

தற்போது பெய்துவரும் மழை காரணமாக கடந்த மாதம் தொடக்கம் உணவு,நீர் மூலம் பரவும் நோய்களும் ,நுளம்பு மூலம் பரவும் நோய்களும் இப்பகுதிகளில் அதிகரித்ததை அடுத்தே இப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகதரும் இணைந்து சனசமூக நிலையங்கள், பாலர் பாடசாலைக்ள், மற்றும பொது மக்களிற்கும் இவ் விழிப்புணர்வு படக்காட்சிகள் காண்பிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளபபட்டன.

சுமார் நூறுக்கும் மேற்பட்ட பொது மக்கள் இப் படக்காட்சிகளில் பங்கு பற்றிப்பயன் அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (தி-252)

### நேர்முகப்பரீட்சை

(கொழும்பு)

பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரிக்கு 2004ஆம் ஆண்டு அனுமதிக்கப்படவுள்ள ஆசிரிய பயிலுநர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 10ஆம திகதி பத்தனை ஸ்ரீபாதகல்வியியல் கல்லூரியில் நடைபெறுமென மேற்படி கல்லூரியின் பீடாதிபதி எஸ். முரளிதரன் அறிவித்துள்ளார்.

இதற்கான அழைப்புக் கடிதங்கள அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், நேர்முகப் பரீட்சைக்குப் பின்னரே தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (தி-61,10)

### அடிக்கல் நாட்டல்

(மருதங்கேணி)

பூநகரி தியாக தீபம் தீலிபன் மருத்துவ சேவையின் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் தம்பிராயில் நாட்டப்பட்டது.

இந்நிகழ்வில் கேணல் விதுஷா, தமிழீழ சுகாதார சேவை பணிப்பாளர், தியாக தீபம் தீலிபன் மருத்துவசேவை பொறுப்பாளர், கிளி. மாவட்ட அரச அதிபர், கிளி.மாவட்ட சுகாதார சேவை பிரதிப்பணிப்பாளர், மற்றும் அரச நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (தி-35)

### சுழற்சி முறைக் கடன்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள விதவைகளுக்கு வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் சூழற்சி முறைக் கடன்களை வழங்கியுள்ளது.

இதன் முதல் கட்டமாக குடும்பத் தலைவர்களை இழந்த 25 விதவைகளுக்கு சூழற்சி முறைக் கடனாக 15ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. (தி-35)

### பொதுக் கூட்டம்

(மருதங்கேணி)

பளை அரசினர் வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (தி-35)

### நினைவுத் தூபி புனரமைப்பு

(மருதங்கேணி)

1990ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட 8மாவீரர்களினதும் நினைவுத் தூபி ஒட்டிசுட்டான் வன்னியன் தொழிலகத்தினரால் மீளப் புனரமைக்கப்பட்டுள்ளது.

புனரமைக்கப்பட்ட இத் தூபியின அஞ்சலி நிகழ்வுகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன ஒட்டிசுட்டான் பிரதேச இணைப்பாளர் வே.தயாபரன் தலைமையில் நடைபெற்றது. (தி-35)

### தண்ணீர் தொட்டிகள் அமைப்பு

(ஊர்காவற்றுறை)

வேலணை, சரவணை, பகுதிகளில், 4 தண்ணீர்த் தொட்டிகளை பட்டினிக்கெதிரான நிறுவனம் அமைத்து வருகிறது.

குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் காலங்களில குடிநீரை பவுஸர்கள் மூலம் கொண்டுவந்து தேக்கி, மக்களுக்கு விநியோகிக்க வசதியாகவே மேற்படி தொட்டிகள் அமைக்கப் பட்டுவருகின்றன. (தி-75)

### ஊனமுற்றோர் தினம்

(மருதங்கேணி)

கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினரால், சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை கொண்டாடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய எதிர்வரும் 3ஆம் திகதி காலை கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத் தலைமைச் செயலகத்தில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் கிளிநொச்சி, கரச்சி, கண்டாவளை மற்றும் பூநகரி பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து தலா ஒவ்வொரு ஊனமுற்ற ஆண், பெண் வரவழைக்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர். (தி-35)

### வெள்ள அபாயம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை தம்பாட்டி கிராம குடியிருப்புப் பகுதியில் பெரும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக மேற்படி குடியிருப்புகளில் பெருமளவு மழை நீர் தேங்கிநிற்பதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தொடர்ந்தும் மழை பெய்யுமானால் இக்குடியிருப்புக்களில் உள்ள பல குடும்பங்கள் இடம்பெயரவேண்டிய நிலை ஏற்படும் எனத்தெரியவருகின்றது. (தி-75)

### பதிவினை உறுதி செய்தல்

(யாழ்ப்பாணம்)

தகவல் தொழில்நுட்பப் பூங்காவன் 7வது பிரிவு கற்கை நெறி மாணவர்களுக்கான பரீட்சைகள் விரைவில் நடைபெறவுள்ளது.

எனவே, பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தங்கள் பதிவினை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் உறுதிபடுத்துமாறு அதன் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (தி)

### இலவச கண்பரிசோதனை 74 பேர் பயன்

(மருதங்கேணி)

கிளிநொச்சி பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனையில் நடைபெற்ற இலவச கண் சிகிச்சை முகாமில் 74 பேர் பயனடைந்துள்ளனர்.

லண்டனில் இருந்து வருகைதந்து தற்போது வவுனியா பொது வைத்தியசாலையில் கடமைபுரிந்து வரும் கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ரூபசிங்கம் தலைமையில் மேற்படி கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. (தி-35)

### எயிட்ஸ் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடாத்திய உலக எயிட்ஸ் தின போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும், உலக எயட்ஸ் தினமும் இன்று திங்கட்கிழமை காலை 9.00மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (தி-8)

### கைக்குண்டுத் தாக்குதல் 3 பேர் பலி

(கொழும்பு)

எகலிய கொடையைச் சேர்ந்த பசஙகல என்ற இடத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் 3பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

திருமண வைபவத்தில் இடம்பெற்ற இக் கைக்குண்டுத் தாக்குதல் சம்பவத்திற்கு இரு குழுக்களிடையே ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சினைகளே காரணம் என தெரியவருகிறது. (தி-60,10)

# ஐரோப்பிய யூனியனில் இணைவதற்கு கிழக்கு நாடுகளில் வாக்கெடுப்பு

(நியூயோர்க்)

அடுத்தவருடம் மே மாதம் ஐரோப்பிய யூனியனில் மேலும் சில கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இணையவுள்ள நிலையில்தற்போதைய அங்கத்துவ நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களுக்கான மாநாடு ஒன்று இத்தாலியில் நேப்பில்ஸ் நகரில் நடைபெற்றுள்ளது.

ஐரோப்பிய யூனியனுக்கு தற்போது தலைமை தாங்கும் இத்தாலியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த மாநாட்டில் ஐரோப்பிய நாடுகளின் இராணுவ ஒத்துழைப்பு குறித்து முன்னேற்றகரமான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆயினும் பிரதிநிதித்துவம் தொடர்பாக நாடுகளுக்குள்ள அதிகாரங்கள் குறித்து கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன.

இன்னும் 2 வாரங்களில் ஐரோப்பிய யூனியனின் அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள் ஒன்று கூடி ஒன்றியத்திற்கான முதலாவது அரசியல் அமைப்பை ஏற்றுக்கொள்ளவுள்ளனர்.

இந்த அரசியல் அமைப்பு பின்னர் அங்கத்துவ நாடுகளின் மொழிகளில் பிரசுரிக்கப்பட்டு அந்தந்த நாடுகளில் வர்க்கெடுப்புக்காக விடப்படவுள்ளது.

இதேவேளை, சனத்தொகை கூடிய நாடுகள் பிரதிநிதித்துவம் குறைந்த நாடுகளோடு சம அளவாக கணக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு தற்போது எழுந்துள்ளது.

ஜேர்மனியின் அமைச்சர் ஜெஹாத் ஸ்ரோடர் இதுபற்றி கூறுகையில்,

ஜேர்மனியின் 82 மில்லியன் சனத்தொகைக்கு 29 பிரதிநிதித்துவமே வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஸ்பெயின், கொலண்ட ஆகிய இரு நாடுகளிலும் உள்ள 80 மில்லியன் மக்களுக்கும் பொதுவாக, தலா 27 வாக்குகள் வீதம் அந்த நாடுகளுக்கு மொத்தமாக 54 வாக்குகள் வழங்கப்பட்டுள்ளது கண்டிக்கத்தக்கது.

இதேவேளை, இந்த அரசியல் அமைப்பு மூலம், வீட்டோ அதிகாரம் இழக்கப்பட்டால், அதனை எதிர்க்க உள்ளதாக பிரித்தானியா கூறியுள்ளது.

மேலும், ஐரோப்பிய யூனியனுக்காக வெளிநாட்டு அமைச்சர் ஒருவரை நியமிப்பதையும் பிரித்தானியா ஆட்சேபித்திருக்கின்றது.

அவ்வாறு ஒரு நியமனம் ஏற்பட்டால், ஐரோப்பியப் பேரரசு யுரோப்பியன் ஸுப்பஷ்ரேட் ஒன்றை அமைப்பதற்கு அது ஒப்பாகிவரும் என்றும் பிரித்தானியா காரணம் கூறியிருக்கின்றது. (தி-9)



இந்தியா – பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் போர் நிறுத்த அறிவிப்பு அமுல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இரு நாட்டு எல்லைப் பகுதிகளிலும், காஷ்மீர் மாநிலத்திலும் அமைதி நிலவி வருகிறது. எல்லையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இராணுவ பீரங்கிகளும் வெறிச்சோடிக் காணப்படும் இராணுவ முகாம்களும்.



அவுஸ்திரேலியாவில் அதிகமாகக் காணப்படும் அரிய வகை ஆந்தை சென்னை மயிலாப்பூருக்கு திடீர் விஜயம் செய்தது இதனைக் கைப்பற்றியவர் சென்னை தேனாம்பேட்டை தீயணைப்புத் துறை அதிகாரி.

# சமாதானத் திட்டத்தை செயற்படுத்த பலஸ்தீனப் பிரதமர் நடவடிக்கை

(ரெல்அவிவ்)

பலஸ்தீனப் பிரதமர் அஹமட் குரேய் மத்திய கிழக்குச் சமாதானத் திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பாக நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றார்.

அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டுள்ள சமாதானத்திட்டத்தை முன்னெடுத்துச் சென்று இஸ்ரேலின் சம்மதத்தைப் பெறுவதற்கான தீவிர முயற்சிகளிலேயே அவர் ஈடுபட்டு வருகின்றார்.

ஜோர்தான் அரசு மூலம் இஸ்ரேலை இணங்க வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவதற்காக பலஸ்தீனப் பிரதமர் ஜோர்தானுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

சமாதானம் தொடர்பான பலஸ்தீனத்தின் எதிர்காலத்திட்டங்கள் குறித்து அவர் ஜோர்தான் மன்னரை நேற்றுச் சந்தித்து விளக்கம் அளித்தார்.

இதனடிப்படையில் ஜோர்தான் மன்னனின் அமெரிக்க விஜயத்தின் போது, பலஸ்தீனத்தின் சமாதானத் திட்டங்கள் குறித்து விளக்கவுள்ளார்.

இதேவேளை, பலஸ்தீனப் பிரதமர் அஹமட்குரேய் அமெரிக்காவின் விசேட சமாதானத் தூதுவர் வில்லியம்ஸ் பொன்ஷாவை முதற்தடவையாகச் சந்தித்து இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி-9)

# தென்கொரிய இராணுவத்தை ஈராக்கிற்கு அனுப்பத் திட்டம்

(சியோல்)

ஈராக்கில் அமைதி காக்கும் படையில் அமெரிக்க இராணுவத்தினருடன் இணைந்து கடமையாற்றுவதற்கு தென்கொரிய இராணுவத்தினரை அனுப்புவது குறித்து அந்நாட்டரசு கவனம் செலுத்தி வருகிறது.


இது தொடர்பாக ஆராய தென்கொரிய அரசால் நியமிக்கப்பட்ட விசேட குழு, ஈராக்கிற்கு இராணுவத்தை அனுப்புவதற்கு சிபார்சு செய்துள்ளது.

ஈராக் இராணுவத்தினரையும், அவர்களுக்கான உதவியாளர்களையும் அனுப்பி வைப்பதற்கான அவசியம் குறித்து இக்குழு ஈராக் அரசுக்கு வலியுறுத்தி வருகிறது.

இது தொடர்பான அறிக்கை ஒன்றை இக்குழு நாளை தென்கொரியா அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளது.

தென்கொரியப் பொறியியல் துறையைச் சேர்ந்த 675 பேர் ஏற்கனவே ஈராக்கில் கடமையாற்றி வருகின்றனர்.

எனினும் ஈராக்கியர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகினறனர் என்பதும் தெரிந்ததே. (தி-9)



ஜப்பானின் தென்மேற்கேயுள்ள தானி காஷிமா விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து கடந்த சனிக் கிழமை ஏவப்பட்ட இரண்டு உளவு செயற்கைக் கோள்கள்.

### ஐரோ. ஒன்றிய உள்துறை அமைச்சர்கள்

# சட்டவிரோத குடியேற்றத்தை தடுத்து நிறுத்த நடவடிக்கை

(நியூயோர்க்)

பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும், சட்டவிரோத குடியேற்ற நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்காகவும் ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம்வகிக்கும் நாடுகளில் பிரஜாவுரிமை அற்றவர்களுக்கு விசா வழங்கும் போது அவர்களது பெருவிரல் அடையாளங்களையும், டிஜிட்ரல் புகைப்படங்களையும் விசாப் பத்திரங்களில் இணைப்பதற்கு ஐரோப்பிய ஒன்றிய உள்துறை அமைச்சர்கள் திட்டம் வகுத்துள்ளனர்.

இதற்கான அங்கீகாரத்தை ஐரோப்பிய ஒன்றியம் இதுவரை வழங்காதபோதும், பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஐரோப்பிய ஒன்றிய உள்துறை அமைச்சர்கள் ஆலோசித்து வருகின்றனர்.

உலகம் முழுவதும் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளதால் இந்தத் திட்டத்தை முன்னெடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றிய உள்துறை அமைச்சர்கள் கருத்துக் கூறியுள்ளனர். (உ-9)

# துருக்கி தற்கொலைத் தாக்குதல் சந்தேக நபர் பொலிஸாரால் கைது

(அங்காரா)

துருக்கி இஸ்தான்புல் நகரில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர் ஒருவரை துருக்கியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதுடன், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்டுள்ள சந்கேநபர் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பலியான நபருடன் இணைந்து சதித்திட்டம் தீட்டியவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

துருக்கியின் எல்லைப் பகுதியூடாக ஈரானுக்குள் தப்பிச் செல்ல முயன்றபோதே இவர் கைது செய்யப்பட்டதாகத் துருக்கிப் பொலிஸ் பிரதம அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளாார். (தி-9)

### மீண்டும் பேச்சுக்களைத் தொடருமாறு

# மேற்கத்தேய தலைவர்களுக்கு யஸீர் அரபாத் வலியுறுத்து

(ரெல்அவிவ்)

மத்திய கிழக்கில் மீண்டும் அமைதி நடவடிக்கைகளைத் தொடங்குமாறு மேற்கத்தேய தலைவர்களுக்கு பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர், பிரெஞ்சு அதிபர் ஜெக்ஷெராக், ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் கோபிஅனான், ஸ்பெயின், ஜேர்மனி, கனடா, அயர்லாந்து, மலேசியா மற்றும் தென்னாபிரிக்கத் தலைவர்களுக்கும் அரபாத் கடிதம் எழுதியுள்ளார்.

கடந்த 3 ஆண்டுகளாக மேற்படி சமாதான நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள தாமதம் பலஸ்தீன எல்லையின் அபிவிருத்தி, தொடரும இஸ்ரேலிய ஆதிக்கம் மற்றும் சாலை வரைபடத்தை அமுல்படுத்துவதற்கு இஸ்ரேல் காட்டிவரும் மறுப்பு ஆகியவை குறித்து பேச்சுக்களின் போது கூடிய கவனம் செலுத்துமாறும் அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார் என அரபாத்தின் ஆலோசகர் நபில் அபுருதீனா தெரிவித்துள்ளார். (தி-9)



ஈராக் தலைநகர் பக்தாத்தில் அமெரிக்க இராணுவ வீரர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை நன்றி கூறும் நிகழ்ச்சியில் யு.எஸ். முன்னாள் அதிபர் கிளின்டனின் மனைவி ஹிலாரி (வலது) மகளிர் அமைப்பின் முக்கிய தலைவர்களுடன் ஆலோசனை.

## சிறு விளம்பரம்

### அரிய வாய்ப்பு

காப்புறுதித்துறையில் அனுபவம் பெற்று, கூடிய பணம் மாதாந்தம் சம்பாதிக்க விரும்பும் க.பொ.த. சாதாரண சித்தியெய்திய உயர்தரம் படித்த ஆண், பெண் இரு பாலாருக்கும் இலவச குறுகியகால காப்புறுதி சார் பயிற்சி வழங்கப்பட்டு வருமானத்துக்கும் வழிகாட்டப்படும். 10 உறுப்பினர்களே தேவை. ஆர்வம் உள்ளவாகள், வெளிக்கள வேலைக்குச் சென்று வேலைசெய்ய விரும்புவர்கள் மட்டும் நேரில் பின்வரும் விலாசத்துக்கு வரவும். அரிய சந்தர்ப்பம் உடன் வாருங்கள். க.ஜெயபாலன் 80/5 பருத்தித்துறை வீதி, கிடாய் விழுந்தான், யாழ்ப்பாணம். (7792)

### SPOKEN ENGLISH

அடிப்படையிலிருந்து சுலபமான முறையில் 6 மாத காலங்களுக்குள் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில மற்றும் இலக்கணம், ஆசிரியர் ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302) K.K.S.வீதி யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை. (7786)


# விடுதலைப்புலிகள் எமது கோரிக்கையை அலட்சியம் செய்வதாகவே தெரிகிறது

## அமைச்சர் ஹக்கீம் இந்தியாவில் தெரிவிப்பு

(லண்டன்)

தென் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலை மற்றும் மீண்டும், சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் போது, அதில் முஸ்லிம் சமூகம் தனித்தரப்பாக பங்குபற்றுவதறகு அளிக்கப்பட்டுள்ள உத்தரவாதங்களை சரிவர நடைமுறைப்படுத்துவது ஆகிய விடயங்கள் பற்றி இந்திய வெளியுறவு அமைச்சர் யஸ்வந் சிங்காவுடன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் தலைமையிலான குழுவினர் இன்று சந்தித்துப் பேசவுள்ளதாக அமைச்சர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்பு முறைகள் குறித்து ஆராயும் முகமாக அமைச்சர் ரவூப்ஹக்கீம் தலைமையிலான 11 பேர் கொண்ட அரசியல் குழுவினர், இந்திய அரசின் அழைப்பின் பேரில் ஒரு வாரகால விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ளது.

சென்னையில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதியை சந்தித்துப் பேசியதன் பின்னர், அமைச்சர் ஹக்கீம் பி.பி.சி. தமிழ் சேவைக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே இதனைத் தெவித்தார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில், சமாதானப் பேச்சுவாத்தை மீள ஆரம்பிக்கப்படும் போது, அதில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்கு பற்றவேண்டும் என்பதை அண்மையில் இலங்கை வந்த ஐரோப்பிய யூனியனின் வெளியுறவுததுறை ஆணையாளர் கிறிஸ்பற்றன் உட்பட பல சர்வதேச நாடுகளின் முக்கிய பிரமுகர்களிடம் எடுத்துக்கூறியுள்ளோம். அவர்களும் எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டனர். அத்துடன் இது குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் தாம் எடுத்துக் கூறுவதாகவும் எமக்குத் தெரிவித்தனர்.

ஆனால் விடுதலைப்புலிகள் தரப்பில் எமது இக் கோரிக்கை ஏற்றுக கொள்ளப்பட்டதாகத் தெரியிவில்லை. அவர்கள் எமது கோரிக்கைகளை அலட்சியம் செய்து வருவதாகவே தெரிகிறது.

இவ்விடயம் குறித்து சர்வதேச சமூகமும் கவலைதெரிவிக்கின்றது.


எனவே, எமது இக் கோரிக்கையை விடுதலைப்புலிகள் நிறைவேற்றத் தவறினால், ஏற்கனவே புலிகளுக்கும் எமக்கும் இடையே பலமடைந்துள்ள நல்லிணக்கம், புரிந்துணர்வு, நம்பிக்கை என்பன யாவும் பாதிப்படைந்து விடும்.

இத்தகைய நிலையை தவிர்த்துக் கொள்வதற்காகவே நாங்கள் இத்தகைய பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறோம.

சர்வதேச நாடுகள் எமது கோரிககையை நிறைவேற்றுவதற்கு தேவையான அழுத்தத்தை விடுதலைப்புலிகளுக்கு கொடுக்கும் என்ற நம்பிக்கையிலேயே நாம் இருக்கிறோம்.

அந்த வகையில், இந்திய மத்திய அரசுடனும் பேசசுவார்த்தை நடத்தி வருகிறோம். இந்திய அரசு, புலிகளுக்கு அழுத்தம் கொடுக்காவிட்டாலும், தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளைத் தீர்க்க உதவவேண்டும் என்பதை நாம் முதலில் வலியுறுத்தியுள்ளோம்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கும் இடையே ஏற்பட்டுள்ள அரசியல் முரண்பாடுகளை



களைந்து, மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையினை ஆரம்பிப்பதற்கு தேவயையான அழுத்த்தை இநதிய அரசு வழங்குமாக இருந்தால், எமது கோரிக்கைகள் குறித்து மீண்டும் விடுதலைப்புலிகளுடன் பேசி ஓர் இணக்கப்பாட்டிற்கு வர முடியும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது.

இதேவேளை, எமது தனித்தரப்பு கோரிக்கையை பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவோ அன்றி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ நிராகரிக்கவில்லை.

எனவே, தமிழீழ விடுதலைப்புலிகள் தமது அலட்சியப் போக்கில் இருந்து விலகி எமது கோரிக்கைகளை ஏற்று மீண்டும் சமாதானப் பேச்சு வாத்தையை ஆரம்பிக்க முன்வரவேண்டும் என்றார்.

(தி-62,10)

# சாவகச்சேரியில் திருடர்கள் துணிகரத் திருட்டு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த வெள்ளிக் கிழமை இரவு 4 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் 2 கையடக்கத் தொலை பேசிகளும் 500ரூபா காசும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கொள்ளையர்கள் வீடு உடைக்கப் பயன்படுத்திய கம்பிகளையும் மழைக் கவசங்களையும் விட்டுச் சென்றுள்ளனர்.

இதுதொடர்பாக சாவகச்சேரி குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு இன்ஸ்பெக்டர் எரிச்ரோகித தலைமையில் ஆர். தனஞ்சயன் (18380) எஸ்.விநாயக மூர்த்தி (22342)ஆகியோர் சம்பந்தப்பட்ட இடத்துக்குச் சென்று புலனாய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செயயப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள சுப்பிரமணியம் சங்கரப்பிள்ளை என்பவரது வீட்டிலேயே இக்கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளதி.

(தி-16)

# மகாராணி வழங்கிய விருது பெக்கமின் மனவேதனைக்கு மருந்தாகுமா ?

இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியின் தலைவரான டேவிட் பெக்கமை பிரிட்டிஷ் மகாராணியார் ஒடர் ஒவ் பிரிட்டிஷ் எவ்ஏயா விருதினை வழங்கி கௌரவித்துள்ளார்.

கால்பந்தாட்டத்திற்கு ஆற்றிய சேவைக்காகவும், பிரிட்டிஷின் நல்லெண்ணத் தூதுவராகத் திகழ்வதற்காகவுமே இந்த விருது டேவிட் பெக்கமிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளைய, இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியின் பயிற்றுனராக மேலும் 4ஆண்டுகளுக்கு சுவென கோரே எரிக்ஷன் பதவி நீடிப்பு செய்யப்பட்டுள்ளார். யூரோ 2004 போட்டிகளுக்கு இங்கிலாந்து அணி தகுதி பெற்றுள்ளமை உட்பட தற்போதுள்ள இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியின் பெறுபேறுகளையும் கருத்தில கொண்டு எரிக்ஷனுக்கு இப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கால்பந்தாட்ட வாழ்க்கையும், குடும்ப வாழ்க்கையும் இரு வேறு துருவங்களாகத் தனக்கு இருப்பதாக பெக்கம் அண்மையில் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியின் தலைவராக விளங்கும் டேவிட் பெக்கம், இந்த ஆண்டுத் தொடக்கத்தில் தான் விளையாடி வந்த மென்செஸ்டர் கிளப்பில் இருந்து விலகிக் கொண்டதுடன், ஸ்பெயின் நாட்டின் கால்பந்தாட்ட கழகமான ரியல் மெட்ரிட் கிளப்பில் இணைத்துக் கொண்டது முதல் இந்தப் பிரச்சினை அவருக்கு எழுந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் பல கோடிகள் வருமானமாக பெக்கமிக்கு கிடைத்தாலும் தனது மனைவி, பிள்ளைகளைப் பிரிந்து தொடர்ந்து அதிக நாட்கள் இருப்பது தனக்கு பெரும் கவலை அளிப்பதாகவும் அவர் கூறியிருந்தார்.

டேவிட் பெக்கமின் மனைவியான விக்டோரியா பிரபல இசைக் குழுவான ஸ்பையிஸ்- கேர்ள்ஸ் இசைக் குழுவின் பாடகியாவர். இதனால் தன்னுடன் ஸ்பெயினில் வந்து தங்கிவிடுமாறு பெக்கம் விடுத்த வேண்டுகோளையும் தனது இசைப் பயணத்தைக் காரணம் காட்டி விக்டோரியா மறுத்துவிட்டார். இதனாலேயே பெக்கம் அண்மைக் காலமாக பெரும் மனவேதனை அடைந்திருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

இதனாலேயே அண்மையில் தனது கால்பந்தாட்ட வாழ்க்கையை முடித்து விடலாம் என்றுகூட தான் எண்ணுவதாக பெக்கம் கூறியிருந்தார் எனப் பல உதைபந்தாட்ட இரசிகர்கள் கருதுகின்றனர். எனினும் தனது வாழ்வில் கால்பந்தாட்டம் மிக முக்கியமான ஓர் பங்கு வகிக்கின்றது எனவும், குறைந்தது இரண்டு ஆண்டுகள் கால்பந்தாட்டத்தில் ஈடுபட தான் தீர்மானித்துள்ளதாகவும் டேவிட் பெக்கம் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும், தற்போதைய தனது மனவேதனைகளை போக்கிக் கொள்ள பெக்கம் அதிரடி நடவடிக்கையாக ஸ்பெயின் கால்பந்தாட்டக் கழகமான ரியல் மெட்ரிட் கழகத்தில் இருந்து விலகிக்கொண்டு செல்சியா கழகத்தில் இணைந்து கொள்வார் என பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ-68)

# போட்டியின் விறுவிறுப்புக்கு குறுக்கே நிற்கும் மழை

இலங்கைக்கு கிரிக்கெற் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெற் அணிக்கும், இலங்கை கிரிக்கெற் துறைத் தலைவர் அணிக்குமிடையிலான மூன்றுநாள் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்துள்ளது.

கொழும்பு சி.சி.சி.விளையாட்டரங்கில் நடைபெற்ற இப் போட்டியின் இறுதி நாளான நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவின்போது இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்சில் 4விக்கெற்றுக்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இலங்கை சார்பாக இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தில் மைக்கல் வென்டோவ் 42 ஓட்டங்களையும், லங்கா டிசில்வா 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்திருந்தனர். இலங்கை அணி தனது முதல் இன்னிங்சின் துடுப்பாட்டத்தில் தனது சகல விக்கெற்றுக்களையும் இழந்து 181ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டிருந்தது.

இங்கிலாந்து அணி அதன் முதல் இன்னிங்சில் 9விக்கெற்றுக்களை இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் இங்கிலாந்து அணி சார்பாக துடுப்பெடுத்தாடிய மார்க் புஷ்சர் ஆட்டமிழக்காமல் 105 ஓட்டங்களையும், அன்ரூ பிரின் ஒவ் 47ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்திருந்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் டினுஸ பெனாண்டோ மூன்று விக்கெற்றுக்களையும, லக்ஷித இரண்டு விக்கெற்றுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

எனினும், இலங்கை கிரிக்கெற் துறைத் தலைவர் அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான மூன்று நாள் போட்டியிலும் மழை குறுக்கீடு செய்தமையினால ஆட்ட நேரங்கள் குறைக்கப்பட்டிருந்தன.

மூன்றாவது இறுதி நாள் ஆட்டமும் மாலை 4.15மணிக்கே முடிவுக்கும் கொண்டுவரப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையில் எதிர்வரும் டிசம்பர் 2ஆம் திகதி நடைபெறவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டியிலும் மழையின் பாதிப்பு இருக்கு மானால் போட்டியின் விறுவிறுப்பு குறையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ-68)

# விளையாட்டுச் செய்திகள்

## டேவிஸ் கிண்ண டெனிஸ் போட்டிகள் ஆரம்பம்

அவுஸ்திரேலியாவின் மெல்பேன் டெனிஸ் அரங்கில் கடந்த வெள்ளியன்று ஆரம்பமான டேவிஸ் கிண்ண டெனிஸ் இறுதிப் போட்டியின் முதல்சுற்று ஒற்றையர் ஆட்ட முடிவில் அவுஸ்திரேலியாவும், பிரான்சும் தலா ஒரு வெற்றிகளை ஈட்டி சமநிலைகளில் உள்ளன.

முதலாவது ஒற்றையர் போட்டியில் ஸபெயின் நாட்டு வீரரான யுவான் ஹார்லஸ் பெரேராவை எதிர்த்து விளையாடிய அவுஸ்திரேலிய வீரரான வெயிட்டன் ஹெவிட் 3:6, 6:3, 3:6, 7:6, 6:2 என்ற புள்ளிகளைக் கொண்ட 5செற் போட்டிகளில் மிகக் கடுமையாகப் போராடி 3:2என்ற ஆட்டக்கணக்கில் வெற்றி பெற்றார்.

இதேவேளை, மற்றைய ஒற்றையர் போட்டியில் அவுஸ்திரேலிய வீரரான மார்க்பிலிப் போஸசை எதிர்த்து விளையாடிய பிரான்ஸ் வீரரான ஹார்லுஸ் மோயா 6:4, 6:4, 4:6, 7:6 என்ற புள்ளிகளைக் கொண்ட 4 செற் போட்டிகளில் விளையாடி 3:1என்ற ஆட்டக்கணக்கில் வெற்றிகொண்டார்.

இந்த இரு வெற்றிகள் மூலமே அவுஸ்திரேலியாவும், பிரான்சும் தலா ஒரு வெற்றிகளைப் பெற்றுள்ளன. மிகுதி ஒற்றையர் மற்றும் இரட்டையர் போட்டிகள் உட்பட மற்றும் ஒற்றையர் ஆட்டங்களும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

(உ-68)



டேவிஸ் கோப்பைக்கான இறுதிச் சுற்றின் முதல் 2ஆட்டங்களில் அவுஸ்திரேலியாவும், ஸ்பெயினும் தலா ஒரு வெற்றியைப் பெற்றன. மெல்பேர்னில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் உலகத் தரவரிசையில் 3ஆவது இடத்தில் உள்ள ஸ்பெயின் வீரர் ஜுவான் கார்லோஸ்ஃபெரீரோவை வீழ்த்திய மகிழ்ச்சியில் தரையில் படுத்திருக்கும் அவுஸ்திரேலியாவின் லேடன் ஹுவிட்.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும் —குறள்

வலம்புரி

## வருமுன் காப்போம்

இன்று உலக எயிட்ஸ் தினம். ஒழுக்கக் பிறழ்வுகளுக்கு இயற்கையால் தரப்பட்ட தண்டனையை இன்று உலகம் முழுவதும் அனுபவித்து வருகின்றது. மனிதன் மனிதனாக வாழ மறந்ததனால்- மறுத்ததனால் எயிட்ஸ் என்ற கொடிய நோய் மனித சமூகத்தையே அழிக்கும் அளவுக்கு கோர தாண்டவம் ஆடுகின்றது.

ஆறறிவு படைத்த மனுக்குலம் தன் அறிவை இழந்ததனால் இந்த துயர நோய் மானிட வர்க்கத்தையே வதைத்து வருகிறது. இதற்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கான முயற்சிகள் பல்வேறு கோணங்களில் இருந்து முடுக்கி விடப்பட்ட போதிலும், நோய்த் தாக்கம் அதிகரித்து வருகிறதே தவிர குறைவதாக இல்லை.

இலட்சக் கணக்கானோர் எயிட்ஸ் என்ற மாற்ற முடியாத தொற்று நோய்க்கு ஆளாகி தினமும் செத்து மடிகின்றனர். அதுமட்டுமன்றி எயிட்ஸ் என்ற நோய் நெறி தவறிய வாழ்க்கையால் மட்டுமே ஏற்படுகின்றதென்ற அறியாமை மனுக்குலத்தின் சிந்தையை மறைத்து நிற்பதால் எயிட்ஸ் நோய்க்கு ஆளானவர்கள் சமூகத்திலிருந்தே ஒதுக்கப்படுகின்றனர்.

சதா செத்துக் கொண்டிருப்பது ஒரு புறம், சமூகத்தால் வெறுப்போடு பார்க்கப்படும் நிலை மறுபுறம் இந்த இரண்டு நிலைகளுக்கிடையில் சிக்கித் தவிக்கும் இலட்சக் கணக்கான எயிட்ஸ் நோயாளர்களை காப்பாற்றுவது எங்ஙனம்? அவர்களை இந்தப் பூமியில் வாழ வைப்பது எவ்வாறென மருத்துவ உலகம் தலையைப் பித்துக் கொண்டிருக்கிறது.

இத்தகைய குழப்பமானதோர் சூழ்நிலையில் எயிட்ஸ் நோய்த் தொற்றிலிருந்து ஒவ்வொரு மனிதனும் எவ்வாறு தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்ற அறிவை பெற்றுக் கொள்வதும் அந்த அறிவை வழங்குவதும் தலையான கடமையாகும். அவ் வகையில் இலங்கையில் எயிட்ஸ் நோய்த் தாக்கம் ஏனைய நாடுகளோடு ஒப்பிடுமிடத்து குறைவாக இருக்கின்ற போதிலும் அதன் தாக்கம் வேகமாகப் பரவும் ஆபத்து உண்டென்பதை மருத்துவ ஆய்வுகள் எச்சரிக்கை செய்கின்றன. எனவே எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்துவது இன்றியமையாததாகும்.

வந்த பின்னர் வேதனைப் படுவதைவிட வருமுன்னர் எம்மை நாமே காப்பாற்றிக் கொள்வது அறிவின் வெளிப்பாடு என்பதால் எயிட்ஸின் அபாயம், அதன் தொற்று வழிகள் என்பவற்றை அறிந்து எம்மை நாம் ஒழுங்குபடுத்திக் கொள்வது அவசியமாகும். அதன் மூலமே எயிட்ஸ் என்ற கொடிய தொற்று நோயிலிருந்து மனித சமூகத்தை பாதுகாக்க முடியும்.

# எயிட்ஸ் எனும் அரக்கனை உலகில் இருந்து ஒழிப்போம்

இன்று உலகமக்கள் அனைவரையும் பயமுறுத்திக் கொண்டிருக்கும் ஒரு ஆட்கொல்லி நோய் எதுவென்றால் அது எயிட்ஸ்தான்.

எயிட்ஸ் நோய்க்கு மருந்து கிடையாது. அதனைக் குணமாக்க முடியாது. குணப்படுத்தும் மருந்துகளோ தடுப்பூசி மருந்துகளோ இன்று வரை எந்த நாட்டினராலும் கண்டு பிடிக்கப்படவில்லை. இது மறுக்க முடியாத உண்மை.

## எயிட்ஸின் தன்மை

இந்த நோய் மற்றைய வியாதிகளைப் போல் அல்லாமல் இரத்தத்தில் உள்ள அணுசக்திகளில் நோய் எதிப்பு சக்தியை அழித்து விடுகின்றது. எனவே நாம் கொடுக்கின்ற மருந்துகளும் அந்த அணுக்களுக்குப் போய்ச் சேரமுடியாமல் இரத்த அணுக்கள் மேலும் சிதைவடைந்து விடுகின்றன. இதனால்தான் இந்த நோய் சிறிது சிறிதாக வளர்ந்து மனிதனை மரணத்திற்கு அழைத்துச் செல்கிறது.

எயிட்ஸ் நோய்க்கிருமிகள் எச்.ஐ.வி அதாவது **Human Immuno Deticincy virus** என்பன ஏனைய நோய்க் கிருமிகள் போல் தொற்று நோய்க் கிருமிகள் அல்ல.

இவை தமது இரத்தத்தில் உள்ள அணுக்களின் மூலம் தான் பரவுகிறது. எயிட்ஸ் எனும் எமன் கொசு வாகனத்தில் ,ஏறுவதில்லை. எச்.ஐ.வி. எனும் வைரஸ் வாகனமே எமனின் எருமை வாகனமாக எயிட்ஸில் பயன்படுகிறது.

எனவே இந் நோயை முற்றிலும் அழிக்க நம் அனைவருக்கும் மனத்திடமும் வாழ்வியல் கட்டுப்பாடும் அவசியம்.

நோய்களைப் பொதுவாக இரு வகையாகப் பிரிக்கலாம்.

1) சாதாரண தற்காலிக நோய்கள் **(Acute Diseases)**

2) நாட்பட்ட, திரும்பத் திரும்ப வரும் நோய்கள் **(Chronic Diseases)**



சாதாரண தற்காலிக நோய்கள் நோயின் தன்மைக்கேற்ப மருந்துகளைக் கொடுக்கும்போது சில தினங்களில் குணமாகி அதன் பின்பு எந்தக் குணம்குறியோ இலலாமல் இடைஞ்சல் எதுவும் தராமல் மறைந்து போய் விடுகின்றன.

நாட்பட்ட வியாதிகளுக்கு மருந்துகள் கொடுக்கும்போது தற்காலிகமாக வியாதியின் தன்மை மறைவதுபோல் தோன்றி மருந்தையும் மருத்துவரையும் ஏமாற்றிவிட்டு, சிலகாலம் கழித்து மீண்டும் தோன்றி துன்புறுத்தும்.

இத்தகைய நாட்பட்ட வியாதிகள் பல்வேறு புறத் தோற்றங்களை அதாவது தொந்தரவுகளைக் கொடுத்து மனிதனை ஆயுட்காலம் முழுதும் அவஸ்தைப்படுத்தி நோயாளியாகவே வைத்துச் சாகடிக்கிறது. எயிட்ஸ் நோயின் தன்மையும் இதுவே.

## நோயின் அறிகுறிகள்

சாதாரணமாக எயிட்ஸ்நோய் ஏற்பட்டவர்களுக்கு ஆரம்பத்தில் எந்தவித அறிகுறியும் தெரியாது. உடல் ஆரோக்கியமாக இருப்பது போல இருக்கும். சில வருடங்கள் கழித்து தொடர்ச்சியான அல்லது விட்டுவிட்டு காய்ச்சல், மிக அதிகமான களைப்பு, அதிக வியர்வை, கடுமையான வயிற்றுப்போக்கு, உடல் எடை மிக வேகமாகக் குறைதல், இரத்தத்தில் வெள்ளை அணுக்கள் மிகக் குறைவாக இருத்தல், சருமம் மற்றும் மிருதுவான இடங்களில் படைகள், நாளச் சுரப்பிகளில் வீக்கம் போன்ற அறிகுறிகள் மிகவும் வேகமாகவும் விரைவாகவும் தெரியவரும்.

எயிட்ஸ் கிருமிகள் நமது உடலில் புகுந்தவுடன் நமது உடலில் பரம்பரை அம்சங்களை ஏற்படுத்தி



வரும். **DNA (Deoxiribonucliec acid)** என்ற திசுக்களில் ஊடுருவி அவற்றை **·R.NA (Ribonuclie cacid)** திசுக்களாக மாற்றி செயலிழக்கச் செய்து உடலில் உள்ள எதிர்ப்புச் சக்தியை முற்றாக அழித்து விடுகின்றன.

## ஹோமியோபதி அணுகுமுறை

ஹோமியோபதி தத்துவத்தின் அடிப்படையில் நோய்களில் முதன்மையானதும் மிக முக்கியமானதுமாகக் கருதப்படுவது சோரா எனப்படும் வகையாகும். இந்த சோரா எனும் நோய், மனித மனத்தை தாக்கும் கெட்ட எண்ணங்களின் விளைவால் உந்தப்பட்டு மனித மனத்தை தாக்கி உருவெடுக்கிறது.

ஆசைதான் அழிவுக்குக் காரணம் என்பதை நமது இலக்கியங்கள் பல்வேறு சம்பவங்கள் மூலம் நமக்கு உணர்த்துகிறது. ஆசைதான் சோரா நோயின் ஆரம்ப வித்து. இதனை அறிந்தே ஆன்றோர்கள் ஆசையை விட்டொழி என்று அறிவுறுத்தி வந்தனர்.

சோரா எனும் நோயுடன் சிபிலிங் எனும் நோயும் சேர்ந்து

டாக்டர் டி.செல்வராஜ்
B.A,M.B.(Acu) Ph.D(Acu)

**(Psora and Syphilis)** கூட்டுக் கலவையாக எயிட்ஸ் எனும் நாட்பட்ட தீராத வியாதியை உண்டாக்குகிறது.

இதன் அடிப்படையில் எல்லாவற்றுக்கும் மூலநோய் சோரா என்பதை அறிந்து இதன் வழியில் சிகிச்சை அளித்தால் எயிட்ஸ் நோய் ஹோமியோபதியால் நிச்சயம் கட்டுப்படும். ஆனால் சோரா எனும் வியாதி மேம்போக்கான முறையில் சிகிச்சை அழிக்கப்பட்டால் முழுவதும் குணமாகாமல் அமுக்கப்பட்டு அடுத்தடுத்து பல்வேறு பிரச்சினைகள் தோன்றும். எனவே நாம் இந்த சோரா - சிபிலில அடிப்படைத் தத்துவத்தைக் கருத்தில் கொண்டு சிகிச்சை அழிப்பதன் மூலம் **HIV-I and HIV-II** எனும் நுண்கிருமிகளை பலம் இழக்கச் செய்து வெற்றிகாண முடியும்.

**இன்று உலக எயிட்ஸ்தினம்**

# திருமலைப் பதற்றத்தை கட்டுப்படுத்த ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவு

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைத் தணிப்பதற்கும் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை நடு ஊற்று கிராமத்தில் கடந்த சனிக்கிழமை இனந்தெரியாத நபர்களினால் 3 முஸ்லிம்கள் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டமையினையடுத்து, அங்கு பெரும் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், இச்சம்பவத்தை தொடர்ந்து தமிழ் - முஸ்லிம மக்களிடையே வன்முறை வெடிக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இத்தகைய நிலைமையைக் கருத்தில் கொண்டே ஜனாதிபதி பாதுகாப்பு அதிகாரிகளுக்கு மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார். அத்துடன், பொது மக்கள் அவசரகால நிலைமை குறித்து உடனுக்குடன் அறிவிக்கும் பொருட்டு திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் மேலதிக அவசரகால அழைப்பு பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

சீனன் குடா, கிண்ணியா, மூதூர் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தப் பிரிவில், ஒரு பொறுப்பதிகாரியும், 5 பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பதுமன் அண்மைக காலமாக அங்கு இடம்பெற்று வரும் அசம்பாவிதங்கள் குறித்து தாம் விரைவில் விசாரணைகளை நடதத்தப் போவதாக அப்பகுதி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திருகோணமலையில் கடந்த 25ஆம் திகதி கிண்ணியாவில் இடம்பெற்ற குண்டுவீச்சுச் சம்பவத்தில் நால்வர் கொல்லப்பட்டதுடன், மூவர் படுகாயமடைந்தமையும் அதன்பின்னர் கடந்த சனிக்கிழமை ஏகாம்பர வீதியில் உள்ள குடும்பஸ்தர் ஒருவரின் வீட்டின் மேல் கிரனெற் வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றமையும் தெரிந்ததே.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 3அமைச்சுக்களையும பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் திருகோணமலையில் தொடர்ச்சியாக இத்தகைய வன்முறைச சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-60,10)

## தினசரி தியானம்

### சிந்தனைக் கட்டுப்பாடு

உங்களால் சிற்றின்ப வேட்கைகளைத் தடுக்க முடியாவிட்டால்.உடலையாவது குறைந்த பட்சம் கட்டுப்பாட்டில் வைத்திருங்கள்.தீவிரமாகச் சாதனை செய்யுங்கள். கொடிய சிந்தனைகளிலிருந்து நீங்கள் முழுமையாக விடுபடும் காலம்வரும்.இது ஒரு கஷ்டமான போராட்டம். உங்களுக்கு நிலையான அமைதியும் அழிவற்ற வாழ்க்கையும் வேண்டுமானால் எப்படியாவது இதை நீங்கள் செய்தே ஆகவேண்டும்.

சுவாமி சிவானந்தர்

## அடகு நகைகளைப் பெறலாம

(மருதங்கேணி)

கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளையில் அடகு நகைகளை மீட்பதற்கு பணம் செலுத்தியவர்களின் நகைகள் வந்து சேர்ந்துள்ளன. உரியவர்கள் நகைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி அடகு நகைகளை அலுவலக நேரத்தில் அடையாள அட்டை மற்றும் பணம் கட்டியதற்கான பற்றுச்சீட்டு என்பனவற்றுடன் நேரில்வந்து பெற்றுக் கொள்ளு மாறும அவர் அறிவுறுத்தியுள்ளார். (தி-35)

## வியாபாரக் கடன்

(மருதங்கேணி)

முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் கடந்த மாதம் கரை துறைப் பற்று பகுதிக்குட்பட்ட 100 பயனாளிகளுக்கு வியாபார சுழற்சிக்கடன் வழங்கப்பட்டது.

மேற்படி நிறுவனத்தால் கரை துறைப்பற்று பகுதிக்குட்பட்ட முள்ளியவளை, குமுழமுனை, வற்றாப்பளை, கேப்பாபிலவு, தண்ணீரூற்று, குமாரபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள 100 பயனாளிகளுக்கு தலா 40 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார். (தி-35)

## இராணுவம் தாக்கியதில் 2 இளைஞர்கள் காயம்

(பருத்தித்துறை)

இராணுவத்தினரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் இரண்டு இளைஞர்கள் மந்திகை மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தின்போது துன்னாலை கிழக்கு கரவெட்டியைச் சேர்ந்தவர்களான எம்மன்மதராஜா (வயது-24), ஆர். கார்த்திகேசு (வயது -23) என்பவர்களே காயமடைந்தவர்களாவர்.

வல்லிபுரம் பிரதேசத்தில் 13 பேர் அடங்கிய குழுவொன்று வேட்டை நாய்களுடன் முயல் வேட்டைக்குச் சென்றுள்ளனர். அச்சமயம் இராணுவத்தினர் அங்கு சென்றவேளை இவர்கள் தப்பியோடியதாகவும் அதன்போது இருவர் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-52)

# கைதான புலி உறுப்பினர்கள் இருவரையும் விடுவிக்க ஜனாதிபதியே உத்தரவிட்டார்

## ஆங்கில வார இதழ் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி விடுதலைப்புலிகள் பற்றி கடுமையாக விமர்சித்து வந்தாலும் தனது பாதுகாப்பு பிரிவினரால் அண்மையில் கைது செய்யப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் இருவரை விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளார். இவ்வாறு ஆங்கிலவார இதழ் ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

கடந்த செவ்வாயன்று உயர் பாதுகாப்பு வலயத்தில் ஆட்டோ ஒன்றில் செல்லும்போது இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். கப்பலில் வந்த பிரசார உபகரணங்களை எடுத்து வரும்படி இவர்கள் புலிகளால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

6 மாதத்திற்கு முன்னர் புலிகள் பிரான்சிலிருந்து இறக்குமதி செய்த இவ் உபகரணங்களை மாவீரா தினத்திற்கு முன்பதாக பெறவேண்டுமென விரும்பியிருந்தனர். இதன்படி இப்பொதிகள் ஜெயந்தன் என்பவரின் விலாசத்திற்கு அனுப்பப்பட்டிருந்தன. இப் பொதியில் புலிக்கொடிகள், மகசீன்கள், சீடிகள், ஸ்ரிக்கர்கள் போன்றன இருந்தன.

இப்பொருட்களை எடுத்துச்செல்ல புலிகள் விரும்புகிறார்கள் என சுங்கத்திணைக்களம், முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரீன் பெர்னாண்டோவுக்கு அறிவித்தது. இதற்குப் புலிக்கொடிகள், சீடிகள் தடைசெய்யப்பட்டவை அல்ல என்றும் அவை புலிகளிடம் கையளிக்கப்படலாம் என்றும் ஏனையவற்றை சோதனையிட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். இவ்விடயத்தை அவர் உள்துறை அமைச்சின் செயலாளர் ஜூனைட்டிற்கும் அறிவித்தார்.

இந்நிலையில் புலிகளின் சமாதானச் செயலகத் தலைவர் புலித்தேவன் இப்பொருட்களை எடுத்துச் செல்ல கொழும்பு சென்றார். பின்னர் அவர் புலிக்கொடிகளையும், ஸ்ரிக்கர்களையும் தான் எடுத்துச் செல்வதாகவும் ஏனையவற்றை அரசாங்கத் திணைக்களப் பாதுகாப்பில விட்டுச்செல்வதாகவும் தெரிவித்தார்.

இப்பொருட்களை அகற்றுவதற்கு வசதியாக கப்பல் ஒன்று புலிகளால் வாடகைக்கு அமர்த்தப்பட்டது இதற்காக இக் கப்பல் நிறுவனப் பிரதிநிதிகள் பொருட்களைப் பெற கட்டுநாயக்காவின் சரக்கு வைப்பிடத்திற்கு சென்றனர். ஆனால் அவர்கள் அங்குள்ள பொலிஸ் பொறுப்பதிகாரி சந்திரபாலாவினால் வழி மறிக்கப்பட்டு புலிகளின் பொருட்களை எடுத்துச்செல்ல ஏன் முயல்கிறீர்கள் எனகேட்டு திருப்பி அனுப்பப்பட்டனர். அத்துடன் சந்திரபாலா அவ் ஆவணங்களை பொறுப்பேற்றுக்கொண்டு தான் இதனைக் கையாளுவதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தடைசெய்யப்பட்டவற்றை விட ஏனையவற்றை விடுவிக்கும்படி சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.ஜெயதிலாகாவினால் அறிவிக்கப்பட்ட பின்னர் அப் பொருட்களை எடுத்துச் செல்ல மீண்டும் ஒருமுறை புலித்தேவன் முயன்றுள்ளார். இதற்கென புலித்தேவன் அங்கு சென்றபோது அவர்கள் அவரை கடந்த திங்களன்று வரும்படி பணித்திருந்தனர். இந் நேரத்தில் இப் பொருட்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு மாற்றப்பட்டிருந்தன.

இதன்படி தனக்குப் பதிலாக இரு புலிஉறுப்பினர்களை புலித்தேவன் கடந்த திங்களன்று அனுப்பி இப் பொருட்களை எடுத்துவரும்படி கூறியிருந்தார். அவர்கள் அங்கு சென்ற போது மறுநாள் செவ்வாய் அன்று மீண்டும் வரும்படி பணிக்கப்பட்டனர்.

அதன்படி கடந்த செவ்வாய் அன்று அவர்கள் இருவரும் ஆட்டோ ஒன்றில் அங்கு சென்றுகொண்டிருந்த போது ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினரால் தடுத்து நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டபோது தாங்கள் புலி உறுப்பினர்களென தெரிவித்துள்ளனர். இதனால் இவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டனர். இக் கைதினால் கோபம் அடைந்த புலித்தேவன் கொழும்பில் உள்ள அரச அதிகாரிகளையும் ஏனையோரையும் தொடர்புகொண்டார். இறுதியாக ஜனாதிபதியின் பாதுகாப்பு செயலாளர் மனோ தித்தவெலவினூடாக இச் சம்பவம் ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டது. இதனை அறிந்த ஜனாதிபதி இவ்விருவரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார் இவ்வாறு அந்த ஆங்கிலவார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (ந-6)

# 32 இந்திய மீனவர்களை மன்னார் மீனவர்கள் பிடித்தனர்

(கிளிநொச்சி)

மன்னார் கடற்பரப்பினுள் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் 32 பேரை மன்னார் விடத்தல்தீவு மீனவர்கள் பிடித்தனர்.

நேற்று முன்தினமிரவு 8 மீன்பிடி றோலர்களில் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்த 32 மீனவர்களே இவ்வாறு பிடிபட்டவர்களாவர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் தொடர்பான விபரங்கள் மன்னார் மாவட்ட அரசஅதிபருககு தெரியப படுத்தப்பட்டது.

இதனையடுத்து பிரஸ்தாப மீனவர்களை மன்னாருக்கு அழைத்துச் செல்ல முற்பட்ட போது அவர்கள் அதனை மறுத்துள்ளனர். இதனால் அவர்கள் தற்பொழுது 'விடத்தல் தீவிலுள்ள தேவாலயம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளார். (ந-5)

# வீடு நோக்கிச் சென்ற பெண்மீது சிப்பாய் பலாத்கார முயற்சி

(திருநெல்வேலி)

தனது வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த பெண்மீது இராணுவச் சிப்பாய் ஒருவர் பாலியல் பலாத்கார முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 5 மணியளவில் வடமராட்சி கிழக்கு குடத்தனை பொற்பதிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

பிரஸ்தாப பெண் தனது உறவினர் ஒருவரின் வீட்டில் இரவைக் கழித்துவிட்டு அதிகாலையில் தனது வீட்டுக்குத் திரும்பியுள்ளார்.

அச் சமயம் காவலரணில் இருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் அப் பெண்மீது பாலியல் பலாத்கார முயற்சியில் ஈடுபட முனைந்துள்ளார்.

அதனையடுத்து அப்பெண் கூக்குரலிடவே அயலவர்கள் ஓடிச்சென்ற போது பிரஸ்தாபச் சிப்பாய் தனது முயற்சியைக் கைவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் குறித்து அருகிலிருந்த இராணுவ முகாமில் முறையிட்டப்பட்ட போது இதுபற்றி வேறு எங்கும் முறையிட வேண்டாம் எனவும் சம்பவம் குறித்துப் பொது மக்களுடன் கலந்துரையாடவேண்டுமெனவும் படைத்தரப்பினர் கூறியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை கடற்புலிகளின் அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-43)

## கூட்டணியின்...

ஆனந்தசங்கரியின் தலைமையில் ஏற்பட்டுள்ள நம்பிக்கையின்மையை மத்திய குழுவா, பொதுச்சபையா தீர்மானிப்பது என்ற ஒழுங்குப் பிரச்சினை கூட்டணியின் ஒரு தரப்பினரால் கொண்டுவரப்பட்ட போது கூட்டத்தில் பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டதுடன் உறுப்பினர்கள் தகாத வார்த்தைகளை பிரயோகித்தபடி கைகலப்பில் ஈடுபட்டனர்.

இந் நிலைமை ஏற்படலாமென்று முன்கூட்டியே எதிர்பார்த்திருந்த மத்திய குழு ஏற்பாட்டாளர்கள் பொலிஸ் பாதுகாப்பை கோரியிருந்தனர். இதனால் கூட்டணியின் கொழும்புத் தலைமையகத்தை சுற்றி பலத்த பொலிஸ் காவல் போடப்பட்டிருந்தது.

கூச்சல், குழப்பத்தில் ஈடுபட்டிருந்த கூட்டணியின் இருதரப்பினருக்கிடையே சமரசத்தை ஏற்படுத்தவதற்கும் மோதல்களைத் தவிர்ப்பதற்கும் பொலிஸார் பலத்த சிரமத்தை எதிர் நோக்கியிருந்தனர்.

காலை10.00மணிக்கு ஆரம்பமான கூட்டம் பி.ப 5.30மணி வரை நீடித்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், மத்திய குழுக் கூட்டத்தில் சமுகமளித்திருந்த 37 உறுப்பினர்களில் 25 உறுப்பினர்கள் ஆனந்தசங்கரியின் தலைமையில் நம்பிக்கையின்மையைத் தெரிவித்திருப்பதாகக் கூறி நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெற்றதாக அறிவித்தார்.

இதே வேளை என்னை தலைவர் பதவியில் இருந்து இறக்குவதற்கு இவர்களுக்கு அதிகாரம் இல்லை. பொதுச் சபைக்கே அந்த அதிகாரம் உண்டு என அறிவித்த கூட்டணித் தலைவர் சங்கரி கூட்டம் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்படுவதாகவும் தெரிவித்தார். கட்சிச் செயலாளரும், தலைவரும் மாறி மாறி தங்கள் முடிவுகளை அறிவித்த போது கூட்டத்தில் பெரும் குழப்பம் ஏற்பட கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அலுவலகத்தை விட்டு வெளியேறினர்.

இதன்போது ஒருவரை ஒருவர் தாக்க முற்பட்டனர். எனினும் பொலிஸார் அவர்களை தடுத்து அங்கிருந்து வெளியேறுவதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்தனர். (ம)

## தமிழ் மொழிமூல...

தராதர உயர் தரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் இத் திகதியில்18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

2004ம் ஆண்டு பெப்ரவரி மாதம் கொழும்பில் அமைக்கப்படும் நிலையங்களில் விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு எழுத்துப் பரீட்சை நடைபெறும். (ந-61,10)

## 40இந்திய...

ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 40 பேரும் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

## 4பேர் அடங்கிய நல்லிணக்க...

பட்டதோடு அவை ஜனாதிபதியால் சகல ஊடகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டதால் அரசாங்கத் தரப்பினர் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

கடந்த திங்களன்று நடைபெற்ற பேச்சுக்களின் போது ஜனாதிபதி உள்துறை அமைச்சையும் தொடர்பாடல் அமைச்சையும் திருப்பி ஒப்படைப்பதென்றும் பாதுகாப்பு அமைச்சை வேறு எவருக்கும் வழங்குவதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது அத்துடன் தேர்தல் விவகாரங்கள், நல்லாட்சியை ஏற்படுத்துதல் உட்படபல விடயங்கள் இருதரப்பினருக்குமிடையில் உடன்பாட்டையும் சகவாழ்வையும் ஏற்படுத்துவதென்றும் உடன்பாடு காணப்பட்டிருந்தது

ஆனால் வெள்ளியன்று நடைபெற்ற பேச்சில் ஜனாதிபதி தரப்பு பிரதிநிதிகள் இவ்வுடன்பாடு தொடர்பாக பல மாற்றங்கள் உள்ளன என்றும், இதில் புதிதாக ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்றும் தெரிவித்தனர். முடிவுகள் அனைத்தும் வேறு ஒருவரால் எடுக்கப்பட்டதோடு கூட்டம் நடைபெற முன்னரே அவை அறிவிக்கப்பட்டுவிட்டதால் இக்குழு அமைக்கப்பட்டதில் அர்த்தம் இல்லை என பிரதமர் தரப்பைச் சேர்ந்த மலிக் சமரவிக்கிரமா ஜனாதிபதி தரப்பினரான தித்தவெல கருணரட்ணா ஆகியோருக்கு அறிவித்தார்.

அத்துடன் இந் நெருக்கடி நிலைக்கு தீர்வு காணப்படாவிட்டால் பொதுதேர்தல் ஒன்றை நடாத்தவேண்டி இருக்கும் ஏனெனில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை காலவரையறை இன்றி ஒத்திப் போட முடியாது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை மேற்படி நெருக்கடிக்கு தீர்வுகாணும் இறுதிச் சந்தர்ப்பமாக இன்று திங்கட்கிழமை மீண்டும் சந்திப்பொன்றை நடாத்துவதற்கு இவர்கள் சம்மதித்துள்ளனர். ஆனால் ஜனாதிபதியின் இறுதிப் பிரேரணைப்படி இவற்றில் பிரயோசனம் எதுவும் இல்லைஎன பிரதமர் தமது அங்கத்தவர்களுக்கு தெரிவித்துவிட்டார்.

இந்நிலையில் ஜனாதிபதி அலுவலகத்தால் வெளியிடப்பட்ட புதிய பிரேரணைகள் இதுவரைகாலமும் நடைபெற்ற பேச்சுக்களை மீறிச் செய்யப்பட்டுள்ளதாக ஐ.தே.மு உறுப்பினர்கள் பலரும் குற்றம் சாட்டியுள்ளனர். (த-6)

## மத்தியகுழு உறுப்பினர்களை ...

மளிக்க முற்பட்டதோடு நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவானவர்கள் எல்லோரும் எழும்புங்கள்! எழும்புங்கள்! எனக் கூறி குழப்பத்தை ஏற்படுத்தினார். அது மட்டுமன்றி கூட்டதநில் இருந்து எழுந்து வெளியே சென்றவர்களையும் நம்பிக்கையில்லாத் தீர்மானதிற்கு ஆதரவாளர்களாக எடுத்துக் கொண்டார். இது அருவருக்கத்தக்க செயலாகும். இந்நிலையில் இத்தீர்மானத்தை எவரும் ஏற்கமாட்டார்கள். என்னைப் பொறுத்த வரையில் காலவரையறையின்றி நேற்றைய கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு மத்திய குழுவில் பெரும்பாலானவர்கள் ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள் என்று கட்சிச் செயலாளர் கூறுகிறாரே என்று கேட்ட போது; தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் ஜோசப் பரராஜசிங்கம் உறுப்பினர்களை மிரட்டி ஒப்பம் வாங்கினார். இதனை எம்மால் வெறுமனே பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. தமது சொந்த சக்தியை பிரயோகிக்காமல் மறை முகமாக வேறொரு சக்தியைப் பாவித்து ஒப்பம் பெற்றதை எம்மால் அனுமதிக்க முடியாது என்று கூறிய ஆனந்தசங்கரி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மாறாக நான் எதுவும் செய்யாத நிலையில் வேண்டுமென்று ஒரு சிலரால் மேற்கொள்ளப்பட்ட சம்பவமே இதுவாகும் என்றும் அவர் கூறினார்.(ம)

## சங்கரி மீதான நம்பிக்கை...

போது கூட்ட ஆரம்பத்தில் கட்சித் தலைவர் ஆனந்தசங்கரி மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பாக சமரச நிலை ஏற்பட வாய்ப்புக்கள் இருந்த போதும்அது கைகூடாததினால் மத்திய குழுவில் பிரசன்னமாக இருந்த 37 உறுப்பினர்களில் 25 உறுப்பினர்கள் எழுந்து நின்று தலைவர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

கடந்த பொதுத் தேர்தலில் வடக்குக் கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை மீறிச் செயற்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தியதுடன் தமிழீழ விடுதலைப்புலிகளை சந்திப்பதற்கு வராமல் விட்டமை போன்ற நிகழ்வுகள் எமக்கும் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வைப் பாதுகாத்து அதன் மூலமாகத் தமிழ் பேசும் மக்களின் தேசிய பிரச்சினைக்கு ஒரு நியாயமான,நிரந்தரமான தீர்வைக் காண்பதற்குத் தடையாக இருந்தது.

இந்நிலையில் எமது கட்சியின் தலைவராக அவர் செயற்பட முடியாது. இதனாலேயே சங்கரி மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டது. என்று சம்பந்தன் கூறினார்.

கூட்டணியின் அடுத்த தலைவர் யார் என்று அவரிடம் வினவியபோது பின்னர் அது தீர்மானிக்கப்படுமென்றும் இப்போது ஆனந்தசங்கரியின் மீது நம்பிக்கையில்லை என்று மட்டுமே தீர்மானித்திருப் பதாகவும் அவர் கூறினார். (ம)

## உலக எயிட்ஸ் தினம்

(யாழ்ப்பாணம்)

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் எயிட்ஸ் விழிப் புணர்வு விழா நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று காலை 9.30 மணிக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் ஏ.நல்லதம்பி தலைமையில் நிகழ்வு ஆரம்பமாகும். (த)


**பிற்போடப்பட்டது**

அச்செழு போயிட்டி ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயக் கட்டட வளர்ச்சி நிதிக்காக 29.11.2003 அன்று நடைபெறவிருந்த கலை நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது

நிகழ்வுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்

நிர்வாகத்தினர்

(7791)



**வரலாற்று ஆவணங்கள்**

**கலாநிதி க.குணராசாவின்**

- ஈழத்தவர் வரலாறு
- யாழ்ப்பாண அரச பரம்பரை
- மகாவம்சம் தரும் இலங்கை வரலாறு
- 24 நான்கு மணிநேரம்
- மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது
- கோட்டை வரலாறு
- Jaffna Dynasty

**ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையின்**

- யாழ்ப்பாணச் சரித்திரம்

**மயில்வாகனப் புலவரின்**

- யாழ்ப்பாண வைபவமாலை
- ஜோனின் யாழ்ப்பாணச் சரித்திரம்

*விற்பனையாளர்:*

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ. ஸ்காபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.12.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.